உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# தில்லை நடராயசதகம்.

நாகபட்டணத்தைச்சார்ந்த

கிராமத்துமேட்டிலிருக்கும்

குருலிங்கசங்கமபத்தியிற்சிறந்த

ம-ா-ா-ஸ்ரீ-

ஐயாத்துரைஞானியாரவர்கள்

இயற்றியது.

இஃது.

புதுவை-ம-ா-ா-ஸ்ரீ-

தியாகராயமுதலியாரவர்களும்

வேலூர்-ம-ா-ா-ஸ்ரீ-

ராமகிருஷ்ணமுதலியா

ரவர்களும்

கேட்டுக்கொண்டபடி,

ஷி-ஞானியாரவர்களால்

இரண்டாமுறை

சென்னை

ஏஷியாடிக்என்னும்

அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது. 1866

அக்ஷய (வரு)-வைகாசிமீ

## விளம்பரம்.

இந்த அற்புத தோத்திரமாகிய சதகம் வேண்டியவர்கள் இப்போது சிதம்பரத்தில் வாசஞ்செய்யும்-வே - ராமகிருஷ்ண முதலியாரவர்களிடத்திலும் சென்னபட்டணம் கவுண்டாண்டு ஜெனல்ஆபீசில் உத்தியோகமாயிருக்கும் + ஒப்புஷாப்பு - குமரப்பமுதலியார் குமாரர்-அ-அப்பாசாமி முதலியாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. அப்பாசாமி முதலியார்.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

நிகமாகமசித்தாந்த சைவாசாரியராகிய சிதம்பரம் - வாமதேவ
முருகதேசிகரவர்கள் மாணுக்கருளொருவராகிய
திருமாலைப்பணி-சி-ப-சண்முகவேலுக்கவிராயர்,
இயற்றியது.

—()*()—

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர்சிந்தாமணிநன்னிதியிரண்டுதிகழ்காமதேநுதெய்வத் ... ... *
தருவளர்விண்ணுலகளிக்குமயிராணிகேள்வனெழிற்சதமகன்போன்... ... *
மருவளர்பொன்னிறக்கடுக்கைத்தொடையல்புனைசிவபெருமான்வதியுங்கோயில் *
உருவளர்தன்விழியாகக்கொண்டுவளர்புகழ்ச்சென்னியொண்மைநாட்டில்... (க)

இராமத்துவாரநகைவாசுகியின்மந்தரமாமெவருமேந்த ... ... *
வராமத்துநீள்கடலிட்டேமதிமாலுருப்போலவயங்கியோங்கு ... ... *
மராமத்துவாசுரும்பரிராகத்தையணியாகவறைதலோவாக்... ... *
கிராமத்துமேடெனநாகைக்கருகுவாய்க்குமொருகீர்த்திமூதூர் ... ... (உ)

இதம்பரவுமவ்வூர்வாழ்வேளாளகுலமதனி லிலங்குசீர்த்திச் ... ... *
சிதம்பரமாமகிபனுமற்றவன்மனைவிகமலைநிகர்தெய்வக்கற்பின் ... ... *
விதம்பரவுகமலையுஞ்செய்தவமொருபே ருருக்கொண்டுமேவிற்றென்ன ... ...*
நிதம்பரவயாவர்களுமவதரித்தோ னிலைமைபெறுநீதியுள்ளோன் ... (ங)

பெருமைநிறைபுகழுடையோன்சிறுமைகுறைமதியுடையோன் பிழைத்தலில்லா *
வருமைபெறுவாக்குடையோனன்புநடைமிகவுடையோ னறநூலாய்ந்தே ... *
இருமையிலும்பயனுடையபுலவர்களுக்கெஞ்ஞான்று மீயத்தக்க ... [ளோன் *
வொருமையுறுகொடையுடையோனுவமையினற்றவமுடையோ னுண்மையுள் (ச)

நெடுஞ்சடைக்காட்டகத்திலரவிந்தமணிசிவபெருமா னிகரில்பாதத் ... *
தொடுமிளிருமனனுடையதொண்டர்களுக்கெஞ்ஞான்று மொருமையுண்மை ... *
படும்படிமெய்ப்பத்திசெய்யுங்குணசீலன்றனபாலன் பரவுகோலன் ... ... *
கொடும்பிறைநேர்பூதியணிபாலன்மிகு வாலனனுகூலனூலன். ... (ரு)

அக்கமணியணிதேகனறத்திலணையதிமோக னட்டபோகன் ... ... *
பொக்கமினன்னிலையோகன் [illegible]

## சிறப்புப்பாயிரம்.

தக்கமலபரிபாகன்றனையினிடத்துறுதாகன் சலத்தியாகன் ... *
தொக்கபரமதத்தேகன்முனிந்தசிவமதத்தேகன் சுபமநேகன் ... ... (சு)

பொதியவரைநிதியமெனப்பதியுமொருகுறுமுனிவன் புகழ்மாணுக்கர் .... *
கதியமர்பன்னிருவருண்முன்னுயதொல்காப்பியமுனிவன் கழறுந்தெய்வத் ... *
துதியடைநல்லிலக்கணத்தின்விதியுமிலக்கியநடையுஞ் சூழ்ந்துமன்ற .. *
வதியழகுள்வடமொழியின்வேண்டுவகொண்டேகவிசெய்மாண்பின்மிக்கோன் (எ)

கடுவடைகண்டத்தையுடையான்புலியூரம்பலவன் கதிநீர்ப்பச்சை ... *
படுவடைகண்டத்தையுடையாற்காமென்றெண்ணுவர்க்கீ பவானியாமி ... *
னடுவடைகண்டத்தையுடைமொழிமனமார்நடமதியி னன்பனென்றே ... *
உடுவடைகண்டத்தையுடைமுடிக்கடவுளவன்கழலை யுள்கிவாழ்வோன் ... (அ)

கனவிரதமனமத்தகத்தணியப்பரனைநிதங் கருதிலோர்க்கொல் ... *
கனவிரதமனமத்ததண்மதிநேர்வெண்மைநிறக் கவினேரும்வா ... ... ... *
கனவிரதமனமத்தவன்மனையன்றடிமைகொளுங் கத்தவெள்ளிக் ... ... *
கனவிரதமனமத்தவுளத்தெண்வார்க்கருள்பெரும காத்தியென்போன் ... (கூ)

அத்தனிநாயகனைநிதந்தொழுதெழுவோனவற்கபிடேகத்தையேசெய் ... *
வித்திடுவோனிவேதனஞ்செய்விப்போனல்வில்லுவத்தான் மிக்கபூசை ... ... *
பத்தியுறச்செய்விப்போனவனடியார்க்கனமிடுவோன் பலவாங்கீர்த்தி ... *
வைத்தகலனுவோன்பேறையாத்துறைக்குரிசில் வண்மையோனே ... ... (ய)

அதிகமதுமலர்மாலையாதியவேய்ந்திடினிலையா வாமென்றெண்ணித் ... *
துதிமயமாசதகமொன்றுசெய்தான்சிற்றம்பலத்துட் சோதியாக ... ... *
வதியுமொருசிவபெருமாற்கணியவதிலுறுபதத்தின் வண்மையுஞ்சீர் ... *
பதியுமெழிற்பொருட்சுவையுமணிவகையுநிலைபெற்றுப் பரவியோங்க ...(யக)

அறைதருமந்நூற்கவியின்சுவைதெரிந்தியானருநெடுங்கோட்டமர்தேனென்கோ *
நிறைதருபாற்கடலினிடத்துதியமுதமென்கோபொன் னிலைமைத்தான ... *
முறைதருகற்பகக்கனியென்கோகாமதேநுசொரி யொண்பாலென்கோ ... ... *
முறைதருபேரருளென்கோமுழுத்தவத்துநல்லறிவின் முதிர்ச்சியோரோ ... (யஉ)

மருச்செறிபூங்கொன்றைபுனையப்புலியூர்க்கடவுடிருமன்னுமுன்னர்க் ... ... *
கருச்செயிர்போக்கிடுமிந்நூலவனுருதிரோற்காரிக் கதிர்செய்யாண்டின் ... *
விருச்சிகமாதத்திலிருபஃதெனுநற்றிகதிவெள்ளி மேன்மைநாளில் ... ... *
அருச்சனைசெய்தரங்கேற்றினுன்றில்லைமூவாயிரர் கண்டகங்களிக்க ... (யங)

எடுத்தமனிதப்பிறப்புக்கடுத்தநலகுணம்யாவு மெய்தித்தில்லை ... ... *
...டுக்கவசிபகவைக்கியாகாரயத்தோன்ற லணியார்வேலூர்த் ... *

தொடுத்தபுகழிராமகிருட்டினச்செவ்வேளிதையச்சிற் றலங்கவிட்டே ... *
உடுத்தகடற்புவிபரவவிடுக்கவெனவவனவ்வா றுஞற்றினனே ... ... (௰௪)

அணிபொழிலார்தில்லைச்சிற்றம்பலத்துண்டநவிலு மையன்செய்ய ... *
மணிநிகர்மேனிப்பெருமான்சீரருளானீன்றெடுகண் மணியமைந்து ... ... *
துணிவுளநல்லக்கரமுமோங்குகசிவாலயமுந் துன்னிநாளுங் ... ... *
கணிதமிலாதோங்குகவான்சொரிகவிந்நூன்மிகப்பெருகிக் கதிக்கமாதோ (௰௫)

---

தேவிபட்டினம்,

## ம-ா-ா-ஸ்ரீ-முத்துசாமிப்பிள்ளை,

இயற்றியது.

நேரிசைவெண்பா.

சீர்திகழ்வார்தில்லைச் சிவகாமசுந்தரிதோய் ... ... ... ... *
சீர்திகழ்சிற்சோதியம்பொற் சேவடியிற் - சீர்திகழ்மெய் ... ... ... *
அன்பாற்சதகமென்றோ ணையாத்துறைபுனைந்த ... ... ... ... *
நன்பாவைக்கற்பார்நயந்து ... ... ... ... ... ... *

---

நாகபட்டணம்,

## ம-ா-ா-ஸ்ரீ-கிருஷ்ணசுவாமி

## வித்துவான்,

இயற்றியது.

நேரிசைவெண்பா.

ஐயாத்துறைத்தோன்ற லம்பலவன்பாதமணி ... ... ... ... *
பொய்யாத்துறைச்சதகம் பூம்பொருளை - மெய்யாற்றிற் ... ... *
காணுகவுளக்கண்வாய் கண்டிரதம்பாடமுடி ... ... ... ... *
பூணுகவெப்போதும்புகழ்ந்து. ... ... ... ... ... *

கட்டளைக்கலித்துறை

அட்டாங்கயோகமுஞ் சித்தெட்டுநல்குமகிலமிசைப் ... ... ... *
பட்டாங்கனைத்தையுமாக்குமெய்ப் போதம்பரிந்தளிக்குஞ்... ... ... *
சிட்டாங்கமேவுமையாத்துறைத் தேசிகச்செம்மறன ... ... ... *
திட்டாங்கவம்பலற் கோதுஞ் சதகவெழிற்பொருளே... ... ... ... *

வேதாந்தசாத்திர சம்பன்னராகிய

## பேறை - திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள்

மாணாக்கர்களிலொருவராகிய

## அ-அப்பாசாமி முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

---

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திடநாகமட்டபிரான் திருவடிக்கன்பாய்நாளுஞ்செவ்விதாகப் ... ... *
படணாகமணிபொன்னம்பலவனடிக்கினியதமிழ்ப்பைந்தார்சேர்த்தான் ... *
மடநாரைசங்குமிழுமணியைத்தன்கிளையெனவே வடைகாக்கின்ற .. *
கடணாகைமேட்டுறையையாத்துரைஞானியின் பெருமைகழறலாமோ *

நிலமண்டில வாசிரியப்பா.

திருவளர் தெய்வப் பதிவள மோங்கத் ... ... ... ... ... *
தருவளர் பொழின்மிசைத் தபனன் வந்தணவுற ... ... ... *
வோங்கிய வண்ட முகட்டுறைமாடந் ... ... ... ... ...*
தாங்குறுபற்பல பல்கணித்தலத்தினில்... ... ... ... ... *
பொற்புறுமடவார் சிறுமதிநுதலில் ... ... ... ... *
விற்பெறுதிலதம் புனைந்திடவிரைந்து ... ... ... ... *
விருப்புடனருகுசார் வெண்மதிதன்னைத் ... ... ... ... *
தருப்பணமென்னக் கண்ணுறூஉந்தகைசேர்ந் ... ... ... ... *
திலகொளியிழையணி யலர்மகள்புரையும் ... ... ... ...*
பலபலமகளிர் பயின்மாளிகைதிகழ் ... ... ... *
மாமறையோர்கண்மூவாயிரரகந்தொறுந் ... ... ... *
தூமம்வெண்முகி லெனத்தோன்றுபல்வேள்வியு ... ... *
மங்கலவோசையுமாமறையோசையும் ... ... ... ... *
மெங்கணும்விரவியிமையவரோடும் ... ... ... ... *
பங்கயன்முராரிபதஞ்சலிவியாக்கிரமன் ... ... ... ...*
துங்கவேத்திரப்படைதுலங்குகைத்தோன்றலும் ... ... ... *
அளவிலாமுனிவரு மேழிசைவல்லோர் ... ... ... *
விளரிபாண்கீதஞ்செய்யோதையுமொலிக்குஞ் ... ... ... *
சதம்பரவியசீர்த் தமிழ்நாவலர்புகழ் ... ... ... ... ... *
சிதம்பரமென்னுந் திருத்தலத்தோங்கும் ... ... ... ... ... *
பொன்னினம்பலத்தினி னன்னயந்திகழ ... ... ... *
இன்னிசைமுரலும் பொன்னின்கிண்கிணிகள் ... ... ... *
இடம்பெறவொலிப்பநடம்புரிபாதன் ... ... ... ... *
விடம்பொலிகண்டத்து வேதவேதியன் ... ... ... ... .*
அருமறைபுகன்ற திருமொழிவாயன் ... ... ... ... ... *

## அகவல்.

தருமவிடையூர்திதயாநிதியடிக்கண் ... ... ... ... ... *
பதிந்தமனத்தனாய்ப்பவவலைகடப்ப ... ... ... ... ... *
நிதந்தொழுநியமங் கடைப்பிடிசத்துவக் ... ... ... *
குணமெனும்வாசமருவிவாசித்துக் ... ... ... ... *
கணமுடனளிமுரல்கடுக்கையங்கண்ணியாப் ... ... ... *
பார்ப்பதிகேள்வன் பதமலர்மிசையொளிர் ... ... ... ... *
நாற்பொருள்நிறைந்த நற்சதகம்மெனுந் ... ... ... ... *
தொடையலைச்சூட்டினன் தோமறுகுணத்தோர் ... ... *
த்டையறவெங்கணுந் தாவிவந்தணுகுறும் ... ... ... ... ... *
அவரடிதன்முடிக்கணியெனச்சேர்க்கும் ... ... ... ... ... *
உவமையில்புகழ்சே ருயர்குணவசவர்க் ... ... ... ... *
கிருளறுகுணத்தோரனையபேர்களுக் ... ... ... ... ... *
கருளியதயாபர வமலவல்லமன் ... ... ... ... ... *
அடிமலர்த்தொண்டுசெய்சரணர்களடிகடன் ... ... ... ... *
முடியுறவணங்குறுமுதிர்தவத்தோன்றல் ... ... ... .. *
மித்திரர்தமக்கோர் புத்தமுதனையான் ... ... ... ... ... *
சத்துவகுணத்தோன்தண்ணருட்பொறையான் ... ... ... ... *
நூலாகமந்தெரி நுண்ணியவறிவான் ... ... ... *
சேலார்வயல்சூழ்வேலூர்வாழ்தரு .. ... ... ... *
நற்குணத்தோன்ற னூற்பொருளுணர்ந்தோன் ... ... ... *
சொற்பெருஞ்சிவபதஞ் சோர்வுறாவுளத்தன் ... ... ... ... *
சிற்சபைநடம்புரி பதத்தினைச்சிந்தைசெய் ... ... ... ... ... *
விற்பனனிராமகிருட்டினசீலனுக் ... ... ... ... ... *
கரவணிசடையோனைந் தெழுத்துண்மையைக் ... ... ... ... *
கரதலாமலக மெனத்தெளிவித்தும் ... ... ... ... ... *
பதிபசுபாசப் பான்மையின்பொருளுங் ... ... ... ... ... *
கதிபெறவுணர்த்திய கருணைகூர்தேசிகன் ... ... ... *
பாட்டளிபாண்செயும் பல்பொழில்சூழ்தரு ... ... ... ... *
நாட்டுபுகழ்நாகை மேட்டுக்கிராமம்வாழ் ... ... ... ... *
மையறுகுணத்தோன்வளமை சேர்பாக்கியன் ... ... .. *
பொய்யுரைபகராப்புனிதவாக்கியன் ... ... ... ... ... *
மெய்யுரைபகரு முதிட்டிர னனையான் ... ... ... ... *
ஐயாத்துரைஞானமறிதருகவிஞனே ... ... ... ... *

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# தில்லைநடராயசதகம்.

## கணபதிகாப்பு.

நேரிசைவெண்பா.

தொல்லைமறையாவுந் துதித்திடுமானந்தமயத்
தில்லைநடராயன்றிருச்சதகஞ் - சொல்ல
மொழியருள்வாய்மேல்சிகரி முன்னவனேநல்ல
வழியருள்வாய் கற்பகனேவந்து

கட்டளைக்கலித்துறை.

வெற்பகத்துற்பத்தியாமம் பிகைக்கிறைவிண்மயமாம்
பொற்பகத்தில்லையுள்வாழ்நடராயன்புகழ்ச்சதகம்
அற்பகத்தோடுரைத்தற்குச் செழுஞ்சொலணையவென்றே
கற்பகக்குஞ்சரச்செங்கமலத்தாள் கருதுவனே

பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தில்லைவளரம்பலவர்முல்லைநிலவம்புதத்தேவனொடுபூவனறியாச்
சேவடியர்தூமுடியர்தாவடிவுண்மூவிலைச் செங்கதிர்செய்துங்கவசியார்
தொல்லைவளர்மாமறையினெல்லையுளமேவுசெந் துப்புநிகரொப்பில்சடையார்
தொத்துநிறைபொன்னிதழிமுத்துநிறவெண்கதிர் துலங்கநடமாடுமிறைவர்
அல்லைவளர்பூங்குழலின்வெல்லுமுமையம்மைமவா மூத்தர்மலமுத்தர்சதக
மாயதனையான்மொழியநீயருள்செயண்ணலே யத்திமுகபத்தியடியார்க்
சொல்லைவளரன்புதவுநல்லகுடிலத்தமேலொண்சிகரி யொன்றுமுதல்வ
உத்தமபுராதனவொர்கற்பகவெனத்தனே யுண்மையறிவானபொருளே

## அவையடக்கம்.

பூலோகமதனிலேசிவசிதம்பரநடனபொற்பாதன்வெற்பீன்றிடும்
புத்ரியுமையாளுடன்வாதுகளியற்றியேபொன்னம்பலத்தினின்றோன்
மாலோனுமயனுமேகாணுதகாட்சியன் மத்தமுடிவைத்தபெருமான்
வாழ்கின்றவந்தனர்க்கெப்போதுமருள்கின்றமாதேவன்வாமதேவன்
சாலோகசாமீபசாரூப மேனின்றசாயுச்சியர்தருபவன்
சத்துசித்தாநந்தனேயவன்மீதிலேசதகமொன்றறையலுற்றேன்
மேலோர்களாகுமெல்லோர்களுங்கொள்வார்விரும்புதம்மதலைகொஞ்சி
விளம்புசொல்லின்பொருளுளம்புகக்கொள்ளலின்மிகை யுரைத்திடார்களே

உ

கணபதிதுணை.

சி வ ம ய ம்.

# தில்லைநடராயசதகம்.

## நூல்.

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆதிநடுவந்தமுமகாதியுடனேயெங்கு மங்கிங்கெனுமலனையு ... ... *
மாநந்தசின்மயபராபரசதாசிவ வகண்டிதாகாரவொளியே ... ... ... *
பாதியுமையம்பிகைபதிந்தவுருநீதியே பஞ்சமுகவேதமுன்னர்ப் ... ... *
பட்டகுடிலத்தினதுவட்டநடுவட்பதியொர் பத்மபதவுத்தமவெழிற் ... ... *
சோதிமயமாகியொளிர்நாதவெளிதீபமே தொந்தொமெனவாடுமெணியே ... *
சுத்தவபிடேகநைவேத்யபூசாதிக டொகுத்தகத்தாலிழைத்தேன் ... ... *
சேதிமலமும்மையுனையஞ்சலிசெய்தேனினருள்சேர்த்தென்னையடிமைகொள்வாய்
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. ... (க)

ஆதியேயேகபரபிரமமேபல்லுயிர்க் கங்கங்குமாகிநின்ற ... ... ... *
வநாதியேவிபுதனேயண்டபகிரண்டனே யத்தனேமுத்தனேமின் ... ... *
சோதியேசுடர்விளக்கேபெருஞ் செல்வனேதுரியங்கடந்தபொருளே... ... *
துத்திமணிவாளரவுதத்துசெஞ்சடையனே துய்யனேமெய்யனேசீ... ... *
ரோதியேயன்புமயமானசித்தாந்தனே யுன்னருஞ்சீர்த்திமுதலே ... ...*
யுனையிருகரங்குவித்தேனுமாதேவியொ டொருங்குநீவந்தென்மனதிற் ... *
றீதிரியவோட்டியான்றின்முமுன்பாதங்கள் சேவிப்பவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே.... (உ)

அப்பனேபொன்மயச்சிற்றம்பலத்தனே யாதியேகாந்தவடிவே ... *
யற்புதச்சிற்பரத்தனிமைவெளியேயளவி லாநந்தமோனகுருவே ... ... ...*
முப்புரமெரித்தவிழிநண்ணுநுதலண்ணல்வான் முத்தநகையத்தவானின் ... *
மூளைத்தெழுபனிக்கதிருடைச்சடைமுடித்தவென் முத்தனேயஞ்சலித்தே ... *

ஒப்புவேறில்லாதமெய்ப்பொருளுனக்கியா னோதுகுறையொன்றுகேண்மோ *
வுடற்றைம்புலன்களிறவித்தனன தான்றுமிக் குலைவுமோசொல்லிமுடியா ... *
செப்பமுடையாயெனதுமனமினமும்வாடாம தீர்த்தென்னையடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே... (௩)

ஓருபொருளிரண்டுபொருளென்றுமலெங்குமா யோங்கிவளர்கின்றபொருளே *
யுற்றுணைப்பார்க்கவேதுரியங்கடந்துநீ யோங்காரவட்டவடிவாய். ... *
மருவுவையதன்றியும்புருவநடுவைகுவை வரம்பினல்லாற்றலுடையார் ... *
வழுத்துவர்களவ்வுருவையெம்மானோர்க்கொல்லாது மன்னுமிஃதுண்மையாமா *
திருவளரகத்தனயனிந்திரன்முதற்கடவு டேவரயல்சூழவாமுந் ... ... *
திபநிறைமன்றினேரடியெடுத்தாடுமுன் றிவ்வியவுருவாகுமதனைச் ... *
செருவிடையுடைக்கடவுளேயெற்குணர்த்தியான் சேரவருளடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே.... (௪)

காலனையடர்க்கவுங்கருவில்வாராமலுங் கருணைசெய்தருளவேண்டுங் ... *
கலங்காமனுயினேற்குன்கழலைநம்புங்கருத்துநீயருளவேண்டு ... *
மாலமதையமுதாகவுண்டபரமாநந்தவாதிகுருவானபொருளே ... ... *
யாசையாங்காரமமதைகளென்றுமணுகாம லடியேனைரக்ஷியையா ... ...*
தூலமேபிணமென்றுன்னுருவமேநிசமென்று சூழவறிவித்தமணியே... ... *
துரந்தராநந்தனே துரியமதினின்றவென் சுந்தராநந்தவொளியே ... *
சிலமாவென்மனதையாக்கியேநின்பதஞ்சேர்த் தென்னையடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே,... (௫)

அஞ்சலென்றேசொல்லிவருவதெப்போதுநீ யானேறுயர்த்தபரனே ... *
யனைவருங்கூடிநின்றரகரவெனச்சொல்ல வாநந்தமாரிபொழியத் ... ... *
தஞ்சமெனவடியன்யானெஞ்சகமகிழ்ந்திடத் தரணியுள்ளோர்களறியத் ... *
தாளிணைகடந்தருளவேண்டுமென்னையனே சச்சிதானந்தகுருவே ... ...*
வஞ்சகமிலாமலுன்னுடையநற்கிருபைதனை வாழ்த்துமடியார்களுக்கே ... *
வருவிக்குமத்தனேசித்தனேமுத்தனே வானவெளியானபொருளே ... *
செஞ்சடையதிற்பிஞ்சமதியுடைக்கடவுளே திண்ணமாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே.... (௬)

பரமகுருவானவுன்பதமலர்கள்கதியென்று பத்தியுடனித்தமடியேன் .. *
பண்புடன்றொழுதனனின்னருளமுதமுண்டிடப் பரிவுகூர்ந்தாள்வதென்றோ ... *
சரணமென்றேநிதந்துதியன்பர்நிதியமே சச்சிதாநந்தமுதலே ... ... *
தந்தமொன்றுடையதோர்தந்திபின்றந்தையே தத்துவாதீதமணியே ... ...*
தருணமிதுவாகுமெனையாள்வதற்கையனே சத்தியிடம்வைத்தபரனே ... *
தண்கமலவேதனும்பைந்துளவமார்பனுஞ் சந்ததம்பணியிறைவனே ... ...*
திரணமுஞ்சலியாதவொருபெருங்கடவுளே தேவனேகங்கைசூடீ ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே.... (௭)

எனதுமனமிகவுமேயஞ்சித்தவிக்கின்ற தெந்தைநீயறியாய்கொலோ ... ... *
விகபரமிண்டினுமுயிர்க்குறுதியீயுமென் னிறைவனேயிவ்வில்வாழ்க்கை ... *
யினதுபற்றில்லையிஃதுண்மையேகைவிடா தேகபரமானமுக்க ... ... *
ணெறுழ்விடைப்பாகனேயின்பப்பிரவாகனே யெங்குநிறைகின்றபொருளே *
மனைபொன்பெணெனுமையன்மூன்றுற்றுவாடிமரு மலரிதழிபூத்தவேணி... ...*
மன்னனேமின்னுகல்லானிழலமர்ந்தமெய்ம் மாண்பனேமதிமருண்டு... ... *
தினமுமேவிடயத்திலலையாமலையனே தேர்ச்சிதந்தெனையாளுவாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௮)

நம்பினேனடியனேன்வெம்பிமனம்வாடுவேது நாதனேபனையென்னவே ... *
நாட்டுங்கைநீட்டுமிருகோட்டுமதவெற்பைமு ன்னுளுரித்துப்போர்த்திடு ... *
நம்பனேபம்புகதிரம்பிகையுமாதேவி நங்கைசிவகாமவல்லி ... ... ...*
நகுவதனசுந்தரிசுதந்தரிதிகம்பரி நயந்துணர்த்திடவில்லையோ ... ... *
தம்பியுழல்செம்பதுமவம்பகமொரொட்டுடைத் தூயன்முதலானதேவர்... ... *
துருவவரிதாயவென்றுரியனேகரியவான் றுகளில்கண்டத்தையார்ந்த ... *
செம்பவளமேனியாயுன்பதம்வணங்கியான் றேறநீயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௯)

பொல்லாதசஞ்சிதாகாமியவினைக்குவைகள் போக்கியுறுப்ராரத்துவப் ... *
புசிப்பினைக்கடிதின்முடித்தனையெனப்பூசை புரியுமார்க்கண்டன்முன்னர் ... *
வெல்லாதகாலனைப்பின்னடையவென்றவன் விதியையும்விலக்கிவிட்டு ... *
மேதினியரறியவயதென்றுமீரெட்டென்ன மேவவருள்செய்தொரடியார் ... *
செல்லாதபணமதாலுளம்வருந்தாவணஞ் செல்லவுஞ்செய்துபொழிலார் ... *
திருப்பெருந்துறையினல்வாதவூரடிகடாங் தெரியவுபதேசித்தவென் ... ... *
செல்லார்களத்தனேநல்லார்வளத்தனே சேவடிக்கடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰)

இன்னமுண்டொருசெய்தியேழையான்மொழிவனி யிப்போதிரங்கியதனை ... *
யிச்சையிற்கேட்டருளவேண்டுநீர்பரவைசூ ழிந்நிலவரப்பின்முன்னோ ... *
ரன்னியமில்பத்திவைராக்யசாதனைகளா லறையுநின்பாதமலரை ... ... *
யடைந்தார்களவையெனக்கில்லையேயப்பனே யலைவுபெற்றேய்ந்துமாயு ... *
மென்னையும்பொருளாக்கியோர்கலைக்கன்றுடைய வெந்தையேசந்தமறைக ... *
ளோத்துதற்கரியவான்கங்கைவாழ்சடையனே யெண்கலைக்குறையுளான ... *
தென்னுடைப்பரமனேசிவபெருந்தகையனே தீர்த்தனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௧)

அக்கினியினடுநின்றுதவமியற்றியுமூக் கரிந்துமொருபாலன்றனை ... ... *
யறுத்துநன்கறியமுதுசெய்துமொருகண்ணிடந் தப்பியுமுனருள்பெற்றனர்... *
விக்கினமிலாமலடியேனெங்ஙனம்பெறுவன் விண்ணவர்களெண்ணவொண்ணா ... *
மெய்ப்பொருளதாய்நின்றவொப்பிலாக்கடவுளே வெம்புலியுடைப்பரமனே... *

விக்கிரமமிகும்வீமனிளவலாங்காண்டீப விசயனதுவில்லடிக்கு ... *
மேவுசாக்கியனெறிந்திடுகல்லடிக்கும் விரும்பியகமகிழ்பிரானே ... ... *
சிக்கெனநினைப்பிடித்தனுதினந்துதிசெயத் தீர்த்தனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௨)

மாலயன்காணொணாத்தண்ணறவுகுத்திடும் வள்ளவாய்க்கமலபாதம் ... ... *
வழுத்திடுமுழுத்தவத்தன்பர்கட்கெளியனே மாதேவனேகூரயில். ... *
வேலவன்றன்னுடன்கடதடநெடுங்கோட்டு வெண்புகர்த்தெய்வமூல ... ... *
வேழவதனத்தனைப்பெற்றவென்னத்தனே விண்ணோர்ச்செருக்கவந்த ... *
வாலமதையுண்டகண்டத்தவெண்டிண்டமதி யவிர்பவளவேணியாணி... ... *
யம்பொன்மலைமலைவில்லியம்புநிகரம்பகத் தம்மைசிவகாமவல்லி ... ...*
சிலநிறைவாமபாகத்தனேகத்தனே சேர்த்தென்னையடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௩)

விறன்மிண்டநாயனார்கோபமாப்புறகென விளம்பன்னவர்க்குமேன்மை ... *
விளங்குசங்கமபத்திவலிமையையறிந்தே வியன்கணத்தலைமைதந்தாய் ... *
குறியொன்றுமறியாதகுணமிலாநாயினொரு கூறுமிணையில்லாக்கொடுங் ... *
கோதகப்பாதகனைவாவென்றுநின்னடிக் கோகனகமென்மலர்தனில் ... *
யறிவின்மையுள்ளவர்க்கருமையாயன்புள்ள வடியவர்க்கெளிமைபூண்ட ... *
வம்பலத்தாடுசிவசம்புவேசங்கரா வைம்மலர்ப்பகழியோடு ... .. [ய்
செறிகழைத்தடியனைப்பொடிசெய்தகண்ணனே சேர்த்தென்னையடிமைகொள்வா
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௪)

வில்லாலடித்தபார்த்தற்ககமகிழ்ந்துமுன் மேவியேவரமளித்த ... ... *
வித்தகக்கடவுளேமத்தகரியுரிபோர்த்த விண்ணவாமுத்திமுதலே ... *
வில்லாருமணிநீலகண்டனேவிடையேறு விமலனேகங்கைசூடி ... ... *
வெதாகிதாவாதிநாயகாவன்னநடை மெல்லிசிவகாமிபங்கா ... ... *
பொல்லாக்கொடும்பாவியானாலுமென்பிழை பொறுத்தென்மனந்திருத்திப் ... *
பூரணாநந்தமெய்ப்போதநிலைதந்துனது பொன்னடியினின்மைநிறச் ... *
செல்லார்மலர்க்கோதையிடமேவுநாதனே சேர்த்தென்னையடிமைகொள்வாய்...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்றதென்றில்லைநடராயனே.. (௰௫)

நில்லாதகாயமிதுசதமிலாவாழ்வீது நிசமென்றுநம்புகில்லே... ... ... *
னின்பாதமுறுதியாநம்பினேனுயினே னித்தியாநந்தவாழ்விற் ... ... *
கல்லாதமாந்தர்காண்டற்கரியசோதியே கற்றவர்கடொழுதுபோற்றுங் ... *
கருணையேயருணன்மதியங்கிமூவிழியுடைக் கர்த்தனேயுரைசெய்வேத ... *
சல்லாபசங்கீதவுல்லாசவல்லனே தண்மலர்க்கொன்றைவேய்ந்த ... ...*
சடையனேவிடையனேமான்மழுப்படையனே தாழ்ந்திடாத்தீயர்பக்கஞ் ... *
செல்லாதமெய்யனேயல்லார்களத்தனே சேரவேயடிமைகொள்வாய் ... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௬)

ஒருமைபெறுதிருவுளச்செழுமையுறுநாயனா ரோதுகுறணூற்பாயிரத் ... *
துற்றிடும்வேண்டுதல்வேண்டாமையென்கின்ற வுயர்தொடர்புணர்ந்தேநினை ... *
வருநன்மையில்லாதவடியனுஞ்சார்ந்தனன் மகிமைபெறுமுன்கழற்கு ... *
வாமிசிவகாமியென்னாயிடத்துள்ளவெண் வண்பூதியாடுமேனித் ... *
தருமகுணநாதனேததைமலர்க்கொன்றையந் தாரனேயாரமேவுந் ... *
தழைசடைப்பழையனேவிழைவுடன்புலியத டரிக்குமிடையுற்றவெற்றிச் ... *
செருவிடைக்கொடியனேகருமிடற்றடிகளே சேர்த்துநீயடிமைகொள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே.... (௰௭)

ஒருவுருவுமருவுமாய்நின்றகுருநாதனே யொளிர்ஞானவன்கண்ணினா ... ...*
னுற்றவர்க்கெளியனேமற்றவர்க்கரியனே யுற்றுனைப்பார்க்குமடியார் ... *
புருவநடுவதனில்வாழ்தருபெருங்கடவுளே பூரணாநந்தவடிவே ... *
புல்லறிவையுடையனானாயினும்முன்னடி பொருந்தவும்வலியகோட்டுக் ... *
கருமேதியுடையனாய்வருமவனையோட்டவுங் கருதிநீகண்ணினொளியே ... *
கத்தனேபரமவிண்ணத்தனேசித்தனே காண்பரியதெய்வமறையே... ... *
செருநர்முப்புரமெரியவெரிசெய்கோபாலனே சேவகாவடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௮)

அடியிணைகள்பெற்றிடப்பிறருமறியாமலென்னகமலைவுபெற்றுவாடி ... ... *
யஞ்சித்தவிப்பதனைநெஞ்சமதிலெண்ணிநீ யாயிரங்கதிர்களோடும் ... *
படியுமிப்புவிதனில்விளங்குபாற்கரவிழிப் பஞ்சமுகவிஞ்சுமடியார் ... ... *
பதுமநவிதழ்க்கற்றைசுற்றுசெம்மலரெனப் பகருளக்கோயிலாளுங் ... *
குடிகொண்டவரகரகபாலிதிரிசூலியெங் குருமூர்த்திசேர்த்தியோங்கும்... ...*
கோலமாய்நெடியமாறேடியுங்காணானக் கோகனகமனையபாதா... ... *
திடவிடபகேதனாவிடநாககங்கணா தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௰௯)

பச்சைநிறமுள்ளமென்புழுவைவேட்டுவன்வந்து பற்றிவிளாவாகவேகிப் ... *
பச்சைமண்கூட்டிலேபதியவைத்தங்கதன் பக்கத்திருந்துநாளு ... ...*
மிச்சையாலூதிநன்றாதமதுகாட்டியே யிறகுநிறம்வந்தபின்ன ... ... *
ரெங்கும்பறந்திடச்செய்துதன்னிறமதா யியையப்புரிந்தவதுபோன் ... ... *
மச்சைமூளையுமுதிரமென்புதசைதோலொடு வனைந்திடுசடத்தைநீக்கி ... *
மதிநதிபுனைந்தவுன்றிருவடிக்கருகனாய் வரியளியுணறவுகாலுஞ் ... ...*
செச்சையுறழ்மேனிவன்னச்சரவுபூண்டவென் செல்வனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௨௰)

ஆமையலைகடலிலேநிற்குமஃதங்குநின் றக்கடலின்மாட்டுநெடிய ... ... *
வகன்மேட்டிலேறிநின்றன்புடன்முட்டையிட் டவ்வளவினேகியெண்ணத்... *
தீமையொழிமுட்டைவிட்டக்குட்டியங்கதிற் சேருமதுபோலவேயுன் ... *
றிருவருட்படிபடியிலுற்றுப்பிறந்தேன் றெரிந்துநீயெண்ணிமுன்னே ... *

ருமையென்றுமைபிள்ளையின்பெருந்தந்தையே யுன்னையான்சேர்வதுண்மை ... *
யொப்பின்மறையாவுமேசெப்பவெளிநில்லாத வுயர்குணத்தையமேலாஞ் .. *
சேமமுடையாயிப்படிச்செய்துநன்மையச் சேர்த்தென்னையடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உக)

உன்னையென்னுதயானேதலேகுற்றமதி னுண்மையையுரைப்பல்கெண்மோ ... *
வுன்பதஞ்சிந்தியாத்தோடமதனுலிந்த வொண்புவியினுக்குநீயே ... ... . *
யென்னைவிட்டனையடியனேற்கிருவினைப்பகுதி யினைமிகத்துய்க்கலாயிற்... ...*
றியம்புமற்றங்கதாலெண்ணில்பிறவிக்குவை யெடுக்கலாயிற்றுமேலா .. ... *
மன்னையேயப்பனேயறியாதுசெய்தபிழை யாவும்பொறுத்தேயினி ... *
யாயினும்முனதுதாள்சிந்தித்திடற்குமதி யன்புடன்றந்துவேதச் ... ... *
சென்னிமிசைவளர்கின்றதிருவருட்குன்றமே நிர்த்தனேயடிமைகொள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(உஉ)

என்விதியையெண்ணியெண்ணிப்பெரிதுமேநெஞ்ச மேங்கித்தவிக்கின்றதா ... *
லிப்பொழுதுமுன்வினைப்பகுதியாவையுமறுத் திருபாதமீந்துமுன்னோர் ...*
முன்னவ்வகத்தியர்க்கமிழ்தகிகர்தமிழ்கொள்ளை முன்றந்தவள்ளல்வெள்ளி ... *
முழுமலைதனிற்பவளமாவெழிற்குன்றமே முத்தனேபத்தியன்பர்க் ... ...*
கன்பனேசக்கரத்திண்படைச்செங்கண்மா லடல்விடைப்பாககல்லா ... *
லடியிருந்தொருநால்வருக்கருள்புரிந்தபே ரானந்தமோனவடிவே ... ...*
சின்மயாபொன்மயத்திகிரிவில்லேந்துமுயர் திண்புயாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உங)

உனதுதன்செயலினல்யாவுமிங்குறுவதுவு மொழிவதுவுமன்றிவேறில் ... *
லூர்வனநடப்பனபறப்பனவெனச்சொல்பல வுயிர்களும்மன்னமுறையே ...*
யெனதுமனமும்மன்றியறிவுமாய்நின்றவென் னிறைவனேகுறைதலில்லா ... *
வின்பநிறைவெள்ளமேதுன்பவனநுங்குசெவ் வெரிமழுப்படையவெண்ணு ... *
மனதுடன்பொலிகின்றதிருவடிச்செம்மைவண் மலரினுக்கையநெய்யார் ... *
வளர்குழற்சிற்றிடைக்கருவிழிச்செய்யவாய் மாதுவதிதேகவேகச் ... ... *
சினவரவெனுங்குண்டலத்தனேசித்தனே சேர்த்தென்னையடிமைகொள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உச)

கடவுளரெவர்க்குமேலாங்கடவுளாயவென் கண்ணிணைக்குற்றமணியே ... *
கருமணிமிடற்றினெடுசெம்பவளமேனியுங் கருதுபுகழ்கொண்டதெய்வத் ... *
திடமலிவெண்ணீறுநீள்பொற்சடாமகுடமே திகழவொளிகாலுமேன்மைச் ...*
சிவையெனும்பைங்கொடிபடர்ந்துபுல்லாநின்ற திங்கரும்பானபொருளே ... *
மடல்விரிநறுங்கொன்றைமாலிகாபரணனே மாணிக்கதீபவொளியே ... *
மகிமைபெறுமுன்பாதமறவாமலெப்போதும் வாழ்த்தவேயென்னையயா ... *
திடராகவேலையுண்குறுமுனிக்கருள்பரம தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உரு)

கருணைசெய்வதற்கிஃதுதருணமுக்கண்ணுடைக் கத்தனேபரிசுத்தனே ... *
கயிலாசவாசனேசைலாதிபதிமகள் கலந்தமெய்க்கடவுணீயே ... ... *
பிரமமாநின்றநிறைபெருமையாநந்தனே பேசொணுத்தெய்வமோனப் ... *
பிழம்பானவேதவேதாந்தனேநாதனே பித்தனேசுத்தசைவ ... ... *
சிரமானதிருஞானசம்பந்தனென்றசீர்ச் சேய்க்குமுன்சிவிகைதந்த ... *
சிவபெருந்தகையனேபவவாரிசுவறநீள் சிகையுலாமங்கியான ... ... *
திருவுடைப்பரமனேயொருவிடாதென்றனைச் செம்மையாவடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உசு)

எண்ணுநல்லாணிடத்தைந்தாடியழலாடி யேகாந்தரூபமயனே ... *
யெட்டிரண்டறியாமறட்டுண்டுநிற்கின்ற வென்மனத்தீங்கைநீக்கிக் ... ... *
கண்ணிணைவிழித்துனதுசெம்பதப்போதினிற் கடையேன்கலந்துநிற்கக் ... *
கருணைசெய்தம்பலவசெம்பொன்முடிமேருவாங் கற்றவளைவைத்தகையா ... *
விண்ணைவடிவாகவேநண்ணுமணிகண்டனே வித்தகமறைத்தெய்வமே ... *
வீராதிவீரசூராதிசூரர்களெலாம் வேண்டவரமீந்தவிறையே ... *
தெண்ணிலாப்புணர்கின்றசெஞ்சடைக்கடவுளே தீரனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உஎ)

ஒட்டவாய்நூலினூற்செல்லுவழியின்றியே யுருற்றுநற்குடம்பையுள்ளா ... *
ருலண்டுபோலிவ்வுலகெனும்பஞ்சரத்திலே யுற்றுமதியின்றிமாயு ... ... *
மெட்டுடனிரண்டுமேகற்கிலாவென்றனை யிசைக்குமங்கஃதினின்றே ... ... *
யின்புடனெடுத்துனதுபைம்பொனிகர்பாதமல ரெய்தநீயன்பருக்குத் ... *
தட்டாமல்வேண்டுவரம்யாவையும்புரிகின்ற சம்புவேயம்புயப்பூச் ... *
சக்குவனமாலிகையொர்சக்கரப்படையம்பு தாங்குபொற்செங்கையெங்குஞ் ... *
சிட்டர்புகழ்செய்யமேவுற்றபரமாநந்த தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உஅ)

அந்தரமதிற்றுந்துமிக்குவையிரங்கவிண் ணவர்மலர்கண்மாரியென்ன .. *
வன்புடன்மிகச்சொரியமின்பொலியருந்தவத் தந்தணர்கள்சந்தமறைப... ... *
திந்துமிளிர்சடையெலாநந்துறவெடுத்துமுன் செப்பவளர்கூந்தன்மேய ... *
சிற்றிடைத்துப்பிதழ்ச்செப்புநிகர்கொங்கைவெண் டிகழ்தரளமூரலோடு ... *
முந்துதிரைவளையிந்தவந்தமில்புகழ்ப்புவிய ருயர்வடையமன்றிலெய்தி ... *
யொண்டிறற்புலிமுனிபதஞ்சலிமுனிக்குமுன் னோங்குவரமீந்துநின்ற... ... *
சிந்தனைதனக்கரியசெல்வனேயுன்பதஞ் சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (உகூ)

என்மனந்தான்வாடியுருகலுன் றிருவுளத் தெண்ணவேண்டும்மழிவிலா ... *
விருவினைப்பகுதிமூலஞ்சேடமில்லா திருத்துவிடல்வேண்டுமேயுன் ... *
றன்மயச்செல்வமிப்போதுபெறவேண்டுமெந் தன்மையேசெய்துமேலாஞ் ... *
சச்சிதாநந்தவேகாந்தனேசிவகாம சத்தியிடமேயகுருவே ... ... *

சின்மயத்தனிமைநல்லுருவுடைக்கத்தனே தெண்டிரைக்காரியுண்டு ... ... *
தேவர்கட்கினியாவானமுதுனைத்தந்தவா திசழ்சூலமேந்துகையா ... ...*
தென்மணிப்பாந்தளஞ்சடைமுடிக்குரிசிலே தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுரெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௩௰)

அம்பரமெனுந்திருவுருக்கொடுநிறைந்தவா வங்கயிலைமேயபெருமா ... *
னந்தணர்கடொழுதேத்துமந்தணவிலாசவென் னுநந்தவேகபரம ... ... *
விம்பர்புகழம்பலவசெம்பொனெடுவேணியா விறுதிநடுவாதியிலையோ ... *
டியையண்டபகிரண்டநாதவேதாந்தனே யெழிலுறுமனுதியான ... ...*
வம்பிகைக்கிறைவசிவசங்கரபுனற்கங்கை யாளமர்ந்துற்றசென்னி ... *
யாரழற்செங்கையுடையாய்நினைக்கின்றவ ரகத்துவளர்சோதியாதி ... ... *
செம்பதுமமானவுன்றன்பதத்திப்பொழுது சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுரெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௩௧)

வற்றுதிரையைந்தவொலிதண்கடற்றிரையுளே வாய்த்தலைதரும்புபோல ... ... *
மணமக்கள்மாடுகன்றென்றிவைகள்பயில்கின்ற மாலினிறையில்லின்மேவிச் ... *
சற்றுயினுங்கவலையுற்றுவாடாதின்று சாற்றரியவின்பமாரச் ... ... ...*
சச்சிதாநந்தமயவேதநாதாந்தனே சத்தியிடம்வைத்ததலைவா ... ... *
விற்றலமையாதபெருமாணிக்கவண்ணனே வேதன்முடிகொண்டுபிச்சை ... *
வேண்டியுழலண்ணலேபூண்டபுகழ்பெத்தான்முன் வேண்டவரமீந்துநின்ற ... *
சிற்றம்பலத்தனேபெற்றமாருங்கொடிச் சேவகாவடிமைகொள்வாய் ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுரெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௩௨)

அடிநினைந்தெப்பொழுதுமேத்தியேதொழுகின்ற வடியவர்க்குற்றதிமை .. *
யாவுமடிவித்தும்பிறப்பெனும்பௌவ மறச்சுவறமாற்றிமேலா ... ... ...*
விடுந்தனித்தாமரைச்செழுமலர்க்கழலிணைகண் மேவவேசெய்வையானும் .. *
விழைவுடன்றொழுதல்செய்திலேன்றுதிக்கிலேன் விளங்கவேயெண்ணுகில்லேன்
றிடமிலாத்தினனேனொருவழிபெறக்கருணை செய்துநீயையதெய்வத் ... ... *
திருவுலாங்காயத்திரிக்குரியவத்தமாந் தேவனேபுற்றில்வாழுஞ் ... ... *
செடியுடற்கருநாகமுடியுடைப்பெருமையார் செல்வனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுரெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௩௩)

குழவியுரைகேட்டுவந்தெழின்மேவுகின்றவிரு குரவரினிதுற்றபண்டக் ... ...*
குவையளித்திடுவார்களாலெனதுபுன்மொழிக் குழுவையுன்காதிலேற்றுப் ... *
பழமைபெறுநல்லின்பவழிவில்சீர்க்கடலில்யான் பண்புடன்றங்கியுண்ணப் ...*
பதஞ்சலியுடன்புண்டரீகபாதத்தனும் பார்த்துவலிபோர்த்தநெஞ்சந் ... ... *
தழலிடைப்படுமெழுகுபோலுருகவாடுவோய் தாமமெனவென்புபூண்ட ... *
தயாபரக்கடவுளேதகவுறுச்செல்வன்முன் றந்தசேய்போற்றவிண்ணோர் ... ...*
செழும்பொழிற்றிருவிராமீச்சுரமமர்ந்தவென் றேவனேயடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுரெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௩௪)

அரவிந்தமலர்புரையுமொருவந்தமுள்ளவுன் னடியெண்ணுமன்பர்தாமே ... *
யான்மாவினிலைகண்டுபேரமபதமடைவார்க ளவ்வாறறிந்திலேனு ... ... *
னிருவிகற்பம்பெற்றவுள்ளத்துமம்பொரு னிருமித்தமன்றினுள்ளு ... *
நிகரிலாநந்தநல்லுருவுடனடிக்கின்ற நித்தனேசுத்தனேவான் ... ... ... *
சரவணப்பொய்கைவருமுருகவேடன்னையுஞ் சாற்றுகறையன்னகாற்குஞ் ... *
சரமுகப்பெருமதலையுந்தந்தவத்தனே தப்பிலாவொப்பின்மணியே ... *
செருநட்டமும்மதிள்பொருதிட்டெரித்தவென் செல்வனேயடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௫௫)

எனதுமனதுன்றனிருதிருவடித்தாமரையை யெண்ணுவதுமன்றிநன்று ... *
விருப்பதுநடப்பதுவுமென்செயல்களல்லவே யெவையுமுன்செயல்களலவோ... *
வுனவினித்திடுமமுதமேயெங்குநிறைவாகி யுற்றவொருபெற்றமூர்த்த... .. *
வும்பர்கடமக்குமேலாங்கடவுளேயென்று மொழிவில்மார்க்கண்டன்முனிவன்...*
றனதுமனமஞ்சவருதஞ்சநிகர்காலனைச் சரணபங்கேருகத்தாற ... ... *
சாய்த்தசேவகவிடர்கள்வாய்த்தநிரயத்தில்யான் சாராதுஞானமேவித் ... *
தினமின்பருதவுயர்மேலானபதமதைச்சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௫௬)

சஞ்சலப்பிணிவிஞ்சிவந்தெனைவிழுங்காது தாக்கியேபோக்கிவிட்டுன் ... *
சரணபங்கயமலர்க்கண்மருவுறச்செய்து தப்பாமலெப்போதுமே ... ... *
வஞ்சகமிலாமலேசேவிக்கவையனே வானவுருவானபரனே ... ... *
மாமுத்தியென்றவண்பூமியமர்மேருவே வானவர்களோடுமவுணர் ... ... *
தஞ்சமுறுபாற்கடலிடத்தெழில்கொண்மந்தரச் சையமதையிட்டுநன்றுத் *
தணவாதுகடையநடுவெட்படுகடுந்திறற்சார்ந்தவிடமுண்டகண்டா ... ...*
செஞ்சடைமுடித்தவெண்மதிநதியுடைத்தேவ தேவனேயடிமைகொள்வாய் ..*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௫௭)

ஐம்புலச்சிறுவேடர்துன்புறத்தொடரா தடர்த்துநல்லின்பவெள்ளத் ... *
தழுத்திவிட்டொழியாதியான்மிகப்பருகவென் னையனேயப்பனேபூ ... ... *
வம்பைவைத்திட்டவேணந்தவெந்தீக்கணு லடலைச்செய்தன்றுமன்ற ... *
லங்குழ்லுளாளிரதிநங்கைபங்காளவென் னன்பனைத்தாவெனத்த ... .. *
சம்புநிகர்குயமாதனக்கவன்றேற்றிநீள் சுகமுறப்புரிகவென்றே ... *
சொன்னவெண்கங்காளகயிலாயமலையாள சுத்ததத்வத்தையாய்ந்த... ... *
செம்பொதியமேவுகும்பக்குறுமுனிக்கருள்செய் தேசிகாவடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௫௮)

ஒருறுதியாகவுன்பொன்கழற்றுமரையென் னுள்ளத்திலுன்னுமஃதே ... *
யொழிவில்விசாரமாமன்றிவேறில்லையா லோங்காரவட்டமதிலே ... ... *
சாருவதுமின்பமென்றெண்ணினேனெண்ணமது சாமிநீயறியாய்கொலோ *
சர்வபரிபூரணவகண்டிதாகாரனே சச்சிதாநந்தமயனே ... ... ... *

பேருடனல்லுருருவமின்றியேமிளிர்கின்ற பிஞ்ஞகாமஞ்ஞையன்ன ... *
பேரொழிற்பிடினடைக்கூர்விழிச்சைலமகள் பெற்றவிடமுற்றபெருமான் ... *
சீருலவுமணிகண்டசசிகண்டவத்தன்மை செறியவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (நக)

முன்னமுனையெண்ணியேயீசுரார்ப்பணமென்று மும்மைமலம்வீட்டிநாட்டு ... *
முக்கியப்பொருளானபேரின்பவெள்ளத்துண் மூழ்கினூர்பன்மையோர்க ... *
ளென்னுடையதாய்தந்தையவர்செய்தபேரறத் தெய்தவொண்ணுதபாவி ... *
யெய்தினேனெய்துமதிலென்பயன்பெற்றூர்க ளெத்தன்மையானூர்களோ ... *
முன்னுமின்னமுதமேயன்னவர்கணற்பேறு முற்றியெழிலாகமேவ ... *
மூர்த்தியேயருள்செய்திவ்வார்த்திகத்தன்மையான் முடியாமலின்றுநீயென் ... *
சென்னிமிசையடிவைத்துமன்னவுபதேசமே செய்தென்னையடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சய)

மாதாவினூடுபிதாப்போலென்றுமின்பம் வழங்கலின்னவர்மானுவாய் ... *
மாயாவனீக்கிவாளோயாமலாக்கலின் வாழ்த்தாரியன்மானுவாய் ... ... *
பேதாதியாமபேதங்கள்யாவையுநீக்கு பெருமவுன்பதமலர்களைப் ... *
பெற்றிடாதவர்குலசிரேட்டரேயாயினும் பெரியரோபெரியர்தாமு ... *
மோதியுற்றவராகியுன்னடிதுதிப்பரோ லுயர்தினையுமாவருண்மை ... *
யோதுமவருக்கின்பமுதவவேயையனே யொருபொதுவின்மருவிநின்றுய் ... *
சேதிமலம்யாவையுங்காதிலக்கரமைந்து செப்பியேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(சக)

சாதிவன்றண்டுடையசெங்கரத்துங்கமிகு தனிநந்திபோற்றியேத்துஞ் ... *
சங்கராபொங்கரவமங்கியுள்ளாய்கங்கை தங்குசடையாய்மறைபுகல் ... *
வேதியர்குலத்தொடேனைக்குலம்வகுத்தவென் வேந்தனேநூல்கள்யாவும் ... *
வேண்டியுணர்வோர்புருவமேவிவளர்சோதியே வித்தகச்சைவமணியே ... ...*
யாதியுமநாதியாய்நின்றவுன்பாதமல ரறியாதபேர்களேமே... ... ... *
லாகாதசன்மங்களடைவார்களருநரக மடைவார்களுண்மையாமால் ... *
சீதமதிவதிவேணியண்ணலடியேனையே திண்ணமாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சஉ)

ஆருமிலையேயென்னையஞ்சலென்பாருன்னை யன்றியிதுவுண்மையேயங் ... *
கப்படிமகிழ்ந்தேயளித்தலெப்போதுவெண் ணணிமுத்துநத்துதத்து ... *
நீருலவுவார்புவியிடத்திமயமங்கையா ணிமலையிடமேவவிடைமேல் ... ... *
நின்றெனதுமலவேரறககளைந்தடராம னீக்கியுன்பாதமலர்கள் ... ... ... *
காருமிருநிதியுநற்சிந்தாமணிச்செழுங் காசுமொருகற்பகமும்வண் ... ... *
காமதேனுவுநினைத்துதியடியர்முன்றினிற் காத்திருந்தேவல்புரியுஞ்... ... *
சீருறும்பலதேவர்தம்முளுயர்தேவனே சேரவேயடிமைகொள்வாய் ... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே, (சங)

எட்டாதமலையுச்சிநிலையுற்றமாமரத் தேகுமீக்கோட்டினும்பர் ... ... *
இலங்குசெந்தேன்வட்டவள்ளிருவிற்கிச்சை யெய்முடவனொத்தவென்னை ... *
அட்டாசைபுகழ்செய்யமட்டார்ந்தகுழலியோடகிலாண்டபிரமாண்டமா ... *
னவசிவாகமமலர்ப்பாதநான்கொடுமூன்றெ னரும்பொருள்களாய்பவர்க்குத்...
தட்டாமலாநந்தசுகவாரிபொழிகின்ற தற்பரக்கடவுளேநீ ... ... ...
சார்ந்தெனதுபுன்மையெல்லாந்தவிர்த்தென்றுமுன் றண்கழற்றேனையுண்ணச்... *
சிட்டாவிசிட்டனேகட்டுவெம்பாந்தளஞ் சிற்றிடையவடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சச)

சத்தமுளவெண்கிரணசங்குசக்கரமேந்து தண்மலர்க்கைநெடியமால் ... *
சரணபங்கயமேனமாய்த் தேடியறிகிலாத்தற்பராவொப்பிலாத ... ... *
சுத்தனேகைலைவளரத்தனே வெம்புலித்தோலிடையுடுத்தபரனே ... ...*
சொர்னவேதண்டகோதண்டனே நான்மறைகள்சொல்லுதற்கரியபொருளே *
நித்தமுமநித்தமுநன் முத்தியொடுபெத்தமு நிகழ்த்தொளியுமிருளுமாகி ... *
நின்றபரமானந்தசிவதேவகுருநாத நிர்த்தமிடுகோர்த்தவுன்னுஞ் ... ... *
சித்தமதிலெப்போதுமகலாதுநிற்கின்றதெய்வமே யடிமைகொள்வாய்... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சரு)

ஓதவரிதாயபேரன்புவட்டெய்தியே யோங்கமிகுவுண்மையோடே ... *
உறுதிகொண்டுன்கமலவண்கமலமாமலரிணைத்தபதமுற்றசன்ம ... ... *
வாதனையெனுந்திரையினெற்றுண்டுமாலாகிவலியமலவாணவத்தின் ... ...
வதிந்தவடியேன்பெறவொல்லாதிங்குவந்தநீ வாய்த்தபுரமூன்றுமேயோர் ... *
ஏதுவெனவில்லாகமாமேருகோட்டுமென்னிறைவனேகுறைதலில்லா... ... *
இன்பமயநம்பனேகும்பமுலையரமாதரோத்தமுமையம்மையென்னுஞ் ... *
சீதமதிமுகநங்கைவாழிடத்தையனே தேவனேயடிமைகொள்வாய் ... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(சசு)

காதிணையின்மாணிக்கமுதலாயநவமணிகள் கதிர்வீசிடும்பசும்பொற் ... ... *
கவசகுண்டலமின்னவன்னியொருகைமினக் கனைதுடியொர்கையின்மின்ன *
மேதினியர்புகழ்கின்றவபயகரமின்னவோர் மென்கவிகொள்கையுமின்ன ... *
வீரிசண்டக்காட்டுலவுபாந்தளொடுகங்கைவின் மேவுபணியிந்துமின்ன ... ...*
வோதரியதிறல்வேழமஞ்சவொலிசெய்கின்ற வுழுவையதண்மின்னவதின்மேல் *
ஒளிர்மாவினுள்ளசெந்தளிரன்னபட்டாடை யுடைமின்னவம்மையோடுந் ... *
தீதொருவுமன்றினிடையாடியருளண்ணலே தீயேனையடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சஎ)

ஆடரவின்மணிமின்னுபணமன்னவல்குலோ டம்புயக்கலுவடம்போல்... ...*
அமர்கொங்கைமங்கைபங்குளசெந்தழற்கணென் னத்தனேயுவமையாகக் ... *
கூடுமவரொருவரில்லாததனிமன்னனே கூறுபல்லுயிர்கடோறுங் ... ...
குலவுபரிபூரணகூற்றைச்செகுத்தநற் கூத்தனேயீமமாகுங் ... ...

காடுமிளிர்கோயிலாவாடியருள்பித்தனே கழலிணைகளெண்ணுவோனைக் ... *
காத்தளித்தாண்டருள்செயுயர்வள்ளலேபெருங் கருணையானந்தமுகிலே ... *
தேடரியசிவஞானபூமிவளர்சோதியே திங்ககலவடிமைகொள்வாய் ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (சஅ)

அவலனுனுயினும்மிவ்வுலகிலுறுகின்ற வள்வில்பல்லுயிர்களுக்கே ... ... *
யன்னையப்பனுமாயளிக்குநீயிவ்வேழை யடிமையைக்காப்பதரிதோ ... *
இவர்கின்றவெண்கூனலம்பிறைமுடித்தவெம் மிறைவனென்றெவருமேத்த ... *
இலங்குசிவசங்கரசதாசிவபராபரா விணையில்வலிகொளுமெண்புயா ... *
திவளுமனல்விழியுடையதெய்வமேயெங்குமாச் செறிகின்றபூரணமதாங் ... *
தேகனேவாகனேநாகனேயோகனே தேடரியமாணிக்கமே ... ... *
திவள்கின்றபைங்கொடியிடைச்சிவையிடத்தனே தீர்த்தனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (சகூ)

ஒன்றுமறியாததீவேடன்முன்னுளினி லுவப்புடன்மராமராவென் ... *
றோதியேகதியடைந்தானென்றுயாவர்களு மோதுமஃதுண்மைதானே ... *
என்றுபிரமாதியர்க்கரியவென்சோதியே யேகனேயிபமருப்பை ... ... ...*
யிணையல்லையென்னப்பணைத்தெழுதுணைக்கொங்கை யிமயம்வருமுமைகாணநின்*
றென்றுநல்லம்பலந்தனிடம்புரிமெல் லிதழ்க்கமலமொத்தசெவ்வி ... ...*
யிணைப்பதங்கண்டுனதுபெயர்மொழிந்தெந்நாளு மேத்தினேனேத்தினேனுற்... *
றென்றிசைக்காலனகர்சேராமலிப்போது செம்மையாவடிமைகொள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(ருய)

முத்திக்குவித்தாகவுறுகின்றமுதல்வனே முதலெழுத்தாயபொருளே ... ... *
மொழிகின்றவட்டமறுகோணமுக்கோணமேன் முகமிளிருமத்தமிந்து ... *
நத்தநிகர்மலமாய்த்தசுத்தர்துதிநாற்கோண நவிலுமிவைவடிவமாக ... ... *
நருகலைகளின்வதியுமொளியுடையசோதியே நாதமயமானகுருவே ... *
நித்தமுளகடவுளேநிர்த்தமிடுமடிகளே நிலைமைபெறுமெய்ம்மையோடே ...*
நிகழ்பெருந்தேவாரமோடுதிருவாசகமு நேயமாவோதுவோர்க்கே ... ...*
சித்தியோடுயர்முத்தியருள்கின்றமூர்த்தியே தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(ருக)

உன்மனமிரங்கியடியேன்கருநிலத்திலுற வொட்டாதுசெய்துமேலு ... *
முளைப்பவமையாதபரமாநந்தவீட்டினி லுவப்புடன்வதிந்துவாழச் ... ... *
சின்மயவெழிற்றிருவுருக்குரவர்நாதனே செப்புமன்புடையர்தம்பாற் ... *
சென்றவர்கள்வேண்டுவரமீயுமொருகற்பகச் செழுமைபெறுதெய்வதருவே ... *
கன்மனதுளவர்பக்கமடையாததீரனே கண்மணிக்குரியமணியே ... ... *
கருணாரசாம்போருகாக்ஷவீக்ஷணியனே கயிலாசகிரிவாசனே... ... ... *
சென்மவிகுழற்பரவைகேள்வனுக்கருள்கின்ற செல்வனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (ருஉ)

தருணபங்கயமுகையையேய்பொற்சுணங்குடன் றங்குமுலைநங்கையுமையா ... *
டயங்கிடத்தப்பனேமுப்புரமெரித்தவென் சங்கராகங்காதரா ... ... *
சரணமென்றடைபவர்க்கருள்கின்றவள்ளலே சாந்தனே நூல்கள்யாவுந் ... *
தாழாதுவாசித்தபுலவர்துதியண்ணலே தண்ணமுதமொத்ததூய ... ... *
நிருமலத்திங்கள்வாழ்செஞ்சடைக்கூத்தனே நிகரிலாநந்தமயனே ... ... *
நித்தியக்கடவுளேபத்திபுரிதொண்டர்க்கு நேயனேயுன்றன்மேன்மைத் ... *
திருவடிக்கன்புபூண்டொன்றுமலொன்றிடத் தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (ருங)

மயக்கவிழியிற்சுழலுமனநினைவுபோக்கியுன் மகிமைபெறுகின்றசெந்தா ... *
மரைமலர்களொத்தசேவடியிணைகண்மறவாது வாழ்த்தவருளுனைநம்பினேன் ... *
சயத்தனிவிடைப்பாகனேயைபிலீவந்து சார்ந்ததனைவிட்டுநீங்காத் ..., *
தன்மைபோன்மாயையொழியாப்பிரபஞ்சத்திற் றயங்கியலைவுற்றுநின்றே ... *
னியக்கர்கந்திருவர்துதியத்தனேமுத்தனே யெண்டோளுடைப்பரமனே ... *
இறைவனேசுத்தமெய்ஞ்ஞானியர்மனத்தினி லிருக்குமாசற்றவொளியே ... *
தியக்கமற்றிடுமுதற்பிரணவஸ்வரூபியே சிட்டனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (ருச)

ஏகவெளிதிருமேனியாமேருகோதண்ட மேயாகவேதண்டமே ... ... *
யேயடற்புயமாகமூதண்டகூடமே யேருலவுமுடியதாக ... ... *
வாகமவழிற்சாத்திரங்களுணர்ஞானியர்க ளறியவொன்றிந்தவடிவோ ... *
டாயிழையுமாதேவியிடமருவவம்பொனுலாயசிற்றம்பலத்தே ... ... *
மோகமுனிவாளரவுமுனிப்புலிக்கான்முனிகண் முன்னர்நின்றேத்தவாடு ... *
முத்தனேயத்தனேபத்தர்குலகத்தனே மூர்த்தியேதீர்த்தமேய ... ... *
சேகராவிந்நாயினேனினிக்கருவிலே சேராமலடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (ருரு)

இன்னமடியேன்காலமெத்தனையிருந்திங்ங னேவினைப்பகுதியால்வந் ... *
தெய்துசுகதுக்கமாந்திடவேண்டுமிவையா லிடர்ப்படுதென்முடியாதுகாண் ... *
சின்னபின்னமதாகமனதுபோகாமலுன் றிருவடிக்கமலமலரிற் ... *
சிந்துசெந்தேனுண்டுமெய்ஞ்ஞானபோகந் திளைத்திடக்கனிவுகூர்ந்தே ... *
யன்னையேயப்பனேயாகமமுரைத்தபடி யாயபலவடிவுகொண்ட ... ...*
வண்ணலேவிண்ணவர்க்கரியவானமுதமே யாதிநடுவந்தமில்லாச் ... ... *
சென்னிமதிவைத்தசிற்பரதற்பராவாம தேவவெனையடிமைகொள்வாய்... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (ருசு)

ஆக்குசெந்தேனொழுகுபூக்கடவுளாவிந்த வகிலாண்டகோடியெல்லா ... *
மன்புறமிகப்படைத்தம்மலர்க்கண்ணனு வலையாதவற்றையாவுங் ... *
காக்குவினைகொண்டுருத்திரனுவழித்துநுதல் காட்டுறுமகேசனுமுன் ... *
கணக்கில்லையாகவீட்டியவினைப்பயனையே காட்டாமலூட்டியார்க்கு ... ... *

நோக்கவமையாச்சதாசிவமூர்த்தியாகின்று நொய்மைதீர்கருணைசெய்து ... *
நுவலரியமணிமன்றிலாடுமோநந்தனே நோன்புபெறுமன்பரோத்துங் ... *
தீக்கணுடையங்கணுபோக்குவரவில்லாத தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே... (௫௭)

அஞ்சுதிருமாமுகமுமத்தமொருபத்துமே லானவிழியைம்மூன்றுமே ... *
யார்ந்தவிருபத்தைந்துகூர்ந்தவருடிருமேனி யாய்செஞ்சரோருகத்தின் ... *
கிஞ்சுகவிதழ்க்கற்றையுற்றபூவிழியாழி கிளர்கரத்தாவினுக்கே ... ... *
கிளக்கவைகுண்டமென்றேகொட்டிலாக்கினுய் கிட்டரியஞானமாந்தர்... ... *
நெஞ்சினிலுனைத்தஞ்சமென்றெண்ணவந்நெஞ்சி னேயமாவேகிநின்று ... *
நிகரிலாநந்தமழைபொழிகின்றகொண்டலே நித்தனேபித்தனேபொற் ... *
செஞ்சிலம்பணிபாதவெஞ்சலினிழற்கண்யான் சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்றதென்றில்லைநடராயனே. (௫௮)

அல்லலையறுத்திடுகவாநந்தமானவினை யம்போருகத்திலாரும்... ... ... *
அந்தமில்புகழ்ச்சேவடிக்கணுறவெந்நாளு மருள்செய்கவன்பர்போற்றுஞ்... *
சில்லியரவொத்தவல்குற்குவளைவிழிமாது சிவகாமிகேள்வனேபொற்... ... *
றேவகட்கரியனேசிற்றம்பலத்தனே தேசிகாகருணலயா ... ... *
தொல்லைநால்வர்க்கருள்செய்தாலநிழன்மேயவென் சோதியேகடவுளேமுன்... *
சுந்தரனைநற்றோழனுக்கொண்டஞானமாஞ் சுடரொளித்திபவடிவே ... *
செல்லைநிகர்களமுடையனேகருக்குழியில்யான் சேராமலடிமைகெள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௫௯)

உன்னடிமையாயினேனென்றுலகர்யாவருமோதுநாளெந்தநாளோ ... *
வுடல்பொருளொடாவியிம்மூன்றுமிகுபிரியமா வுதவினன்மற்றஃதுதிண்ண ... *
முன்னவினையறமாற்றியாநந்தவெள்ளத்துண் மூழ்கியான்றோன்றுமலே ... *
மொழிபதுமைமயொத்தவுமைவைத்தவிடமுடையனே முதலெழுத்தானபரனே *
யன்னையுயர்தந்தைகுருவானபரிபூரண வாத்திமலர்சேர்த்தமுடியா ... ... *
யாதிநடுவந்தமிவையில்லாதசோதியே யாதாரமானபொருளே ... ... *
சென்னிமதிமன்னியொளிமின்னவணிதோன்றலே திருவடிக்கடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௬௦)

நான்முகத்தெய்வமாமறையறையுமுறைமைதேர் நன்கமலயோனியோடு ... *
நறியபூம்பைந்துழாய்ப்படலையடராகத்து நாரணனுநான்குகோட்டு ... *
வான்முகபடாத்திலொளிரயிராவதத்தன்முதல் வானவர்களறியவொண்ணு ... *
மதிதவழ்சடைக்காட்டினதிவதியவைத்தவென் மன்னனேமன்றில்வாழ்கோ *
மான்முகமொனாந்துடையவோர்வள்ளலேமதுரை வண்மைநகர்தன்னின்முன்னர்
மன்னுப்பன்றிக்குட்டிபன்னிரண்டிற்குமே மாதாவிவினீந்துமுலையைத் ... *
தேன்முகமலர்த்தாமமந்திரிகளாக்கினை தீயேனையடிமைகொள்வாய் ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௬௧

எப்போதுநீவருதல்செப்புவாயென்மனதி லேகாந்தமோனவடிவே ... *
ஈச்சுரியுமாதேவிதன்னொடென்கண்காண வேகாட்சியென்றுதருவாய்... ...*
அப்பார்முடிக்கடவுளேகலியைநீக்கியே யானந்தவெள்ளமதிலே ... ... *
அழுந்தாதழுந்திப்புறவையனேமெய்யனே யந்தணர்கள்போற்றுமறிவே ... *
யொப்பாருமில்லாதவெப்பார்தருங்கனே யொன்றுநுதலுடையகோவே... ...*
யுண்மையறியாதவர்க்கண்மையாகாதநல் லுத்தமவெண்பாலதென்று ... *
செப்போதமதில்வந்தவிடமுண்டகண்டனே சிறியேனையடிமைகொள்வாய் ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (கூஉ)

கருதியுன்றனையடியனாயினேன்றினமுமே கருணைசெய்யென்றுபோற்றிக் ... *
கணக்கிலாமற்கூவிமுறையிடுகிறேன்சங் கராசெவிக்கேற்கவிலையோ ... *
வருமறைகளின்சிரத்தேய்ந்தவாநந்தனே யார்தடுத்தார்களறியேன் ... ... *
அனைவர்கட்கும்பட்சபாதமொன்றில்லா தளித்திடப்பொதுவினின்றாய் ... *
திருவளர்புவிக்கமுதமாகுமென்றியாவருஞ் செப்புசிவகங்கையுடையாய் ... *
திவ்வியபரிபூரணாகாரசிவசம்புவே திகழுமுக்கண்ணனேவெஞ் ... ... *
செருவிடையுகைத்தவென்செல்வனேயடிதந்து செம்மையாவடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (கூங)

உன்னையானேதன்மிகுகுற்றமென்றெண்ணினே னுறுவிதியைநொந்துநொந்தே *
யோய்ந்தலைகிறேனெனக்கோருறுதிசொல்லுவா யும்பர்கட்கரியபொருளே ... *
யன்னைதந்தையரொனைப்பெற்றார்களேயென்றிவ் வவனிமிசைநோதருனே ... *
யறியாமையல்லவாவல்லவாநல்லவா வல்லவாவுற்றமிடறு ... ... ... *
வென்னையனேமன்னர்மன்னனேயன்னமே யின்னநடைகற்கநோக்கி ... *
யேகுநடையுடையம்மையிடமன்னுநாதனே யேகனேயேகாந்தனே ... ... *
சென்னியிளமதிவைத்தவத்தனேயடியிணைகள் சேரவேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (கூச)

என்னுளந்தானேதலடையாமலிறைவனே யேகனேயேகாந்தனே ... ...*
யெங்குநிறைகின்றபரமாநந்ததேவனே யெண்ணவரிதாயபொருளே ... *
யுன்னவெளிவாராதமன்னுதவமேவினோ ரோதிவிழிகாணமின்னி ... ...*
யோங்கிவளர்பேரின்பவெள்ளமயமானவோ ருமையிடத்தமையவைத்த ... *
முன்னெனுமதற்குமுன்னாயபழையோய்முடிவின் முக்கணுடைநக்கவடியார் ... *
மொழியுமவையொழியாமலருள்கின்றமூர்த்தியேமுனிவர்துதியினிமையோய்வின்
சென்னிகரின்முடிமேயமன்றின்மாணிக்கமே செல்வமேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (கூரு)

பரிதியைக்கண்டபனிநில்லாதுவிலகுமப் பண்புபோனொய்மைசெறியும் ... *
பகர்பிராரத்துவம்பரமவுன்னருளினாற் பட்டொழியுமுண்மையிதனைக் ... *
கருதிநீதருகவருளையனேபொருதிறற் கரியவெண்கோட்டுநீட்டுங் ... ... *
கரவாம்பலுரிபோர்த்தகண்ணுதற்புண்ணியா கருணைவடிவானபொருளே... ...*

யுருமையெனுமன்னவற்கருமையாயடியவர்க் குற்றதுணையாகிமேலா ... *
முருவமாயருவமாய்நின்றபரநாதனே யுண்மையறிவானகுருவே ... ... *
செருவிடைக்கொடியுடைச்சேவகாபவவரி சேராமலடிமைகொள்வாய்... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௬௬)

அல்லையறுத்திடுவையொன்றுயானெப்போது மரகராசிவசிவாவென் ... *
றன்புடன்றுதிசெய்வனென்பெருந்துணைவனே யவ்வாறுசெய்துமேலாந்... *
தொல்லைமறையாவுமேசொல்லுதற்கரியவுன் றொல்லைவிலாநந்தவெள்ளந் ... *
தோய்ந்தீததிற்பிரியாமலேய்வுறத்தெய்வமே சூழுமடியார்கள்சொல்லுஞ்... ...*
சொல்லையேவேட்டவர்க்கருள்கின்றசோதியே தூய்விழியொடாயிரம்பூத் ... *
தொகைகொண்டுபூசையைச்செய்யமால்புரிபோது சுடராழியீந்தபரனே... ...*
செல்லினைப்பொருகின்றதண்சுடர்க்கண்டனே தேவனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௬௭)

பிள்ளையாமெனையளித்தாய்போஷியாமற் பெரும்புவியிடத்துநீதான் ... *
பிரியவிடலாகுமோசொல்லுதியவ்வண்ணமே பிரியவிட்டாலுமடியேன் ... ...*
வெள்ளைமதிமுடியுள்ளவள்ளலுன்கமலநிகர் மென்பதந்தன்னைநாளும் ... *
விடுவனல்லேன்மனதினடுவில்வைப்பேனுண்மை வேண்டுமடியார்கள்பவநோய் *
தள்ளும்மணிச்சபையிலாடியருள்சங்கரா தாணுவேமாணுலாவுஞ் ... ...*
சாலோகசாமீபசாரூபமேனின்ற சாயுச்சியம்மவைகளைத் ... ... *
தெள்ளையுறுமதியினோர்கொள்ளவருள்செய்மகா தேவனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௬௮)

கதிரவன்றன்முகங்கண்டசெந்தாமரைக் கான்மலர்கள்விரியுமதுபோற் ... *
கள்ளொழுகுநெய்தல்வளராம்பலுஞ்சந்திரற்கண்டவுடன்மலருமாபோல் ... *
எதிர்வருந்தாயினதுமுகமதைக்கண்டசே யின்வதனமகிழுமென்ன ... *
வென்முகந்தான்மலரவருவதெப்போதுநீ யிறைவாவியம்புவாயா ... ... *
லுதிரவெம்பாவங்கடிருவடித்துணைமனத் தோர்ந்தார்க்கியற்றுமணியே ... *
யோங்காரவட்டமதிலொளிர்கின்றசிட்டனே யுன்னிடார்தம்மைநாளுந் ... *
திதியாதசெல்வனேபலபவக்குழியினிற் சேராமலடிமைகொள்வாய் .. *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௬௯)

யானேழையொருவனுக்குன்னருளிலேசமே யீயினென்குறைவுதோன்று ... *
மிறைவைமரமதில்வறந்திடவிறைத்தாலுநீ ரோர்கூவனிறையுமுன்போல் ... *
ஆனேறுகடவுளேவாழைவனவூரையுள் ளாள்வாமமேவுதனியே ... ... *
அண்டவெளியாவுமேகொண்டதிருமேனியா யன்பில்வளர்மோனகுருவே ... *
தானேறுமெகினவடிவுற்றபிரமன்றொழை தன்னறும்பூவைமுன்னர்த் ... *
தான்பொய்ப்பெருஞ்சான்றுகூறுவாயென்னவது சாற்றவணியாதபரனே ... *
தேனேய்மலர்க்கொன்றையானேயின்னருள்செய்து சேரவேயடிமைகொள்வாய்
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௭௰)

# தில்லைநடராயசதகம்.

அனுதினமுமனதிலுன்னருமைபெறுதிருமேனி யாமதனையெண்ணியேத்தி ... *
யன்புடன்றொழுதனன்செம்பொன்மயமன்றில்யானடையவருள்செய்தல்வேண்டு
மனுவுமாந்தாதாதியெல்லோருமண்ணாசை மாதாசைபொன்னாசையே ... *
வைத்திந்நிலத்தேபிறப்பிறப்பாதியின் விருத்தமுற்றார்களையா ... ... *
புனுகுசவ்வாதுபூமலர்கருப்பூரமவை பாத்துபொற்பாதமுடையாய் ... *
பொன்னனைமுடித்தசிங் கத்தினைமுடித்தவெண் பொற்கழற்பறவையுருவே ... *
செனுவவிணையாகமணிகண்டனே கருவினிற்சேராமலடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்தில்லைநடராயனே. (எக)

ஆதரித்தென்னையாளப்பொறுப்புன்றனக் கல்லாமல்வேறெவர்க்கே ... *
அருந்தமிழ்ப்பாடலோடடியிணைகள்போற்றவே யாக்குதலுமையநீயே... ...*
நீதமுளமனதிடத்தெப்போதுமுறைகின்ற நின்மலாநந்தவடிவே ... ... *
நிச்சயசொரூபமேயச்சுதன்காணும னின்றமறையானபொருளே ... ...*
பூதரி யுமாதேவியம்பிகை மனோமனி புராணிவளர்பாகமுடையாய் ... *
புல்லறிவுள்ளோர்களுக்கெட்டாதபுண்ணியப் பொருவினீறேறவணியுஞ் ... *
சேதனத்தெய்வமேயேதமில்லாமல்யான் சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்தில்லைநடராயனே. (எ௨)

எத்தனைவகைச்சன்மமோவிங்கெடுப்பதினி யென்றெண்ணியஞ்சிவாடும் ... *
ஏழைமைத்தன்மையுறுமென்மனக்கவலைநீ யெப்போதுமறிவையுமைவாழ் ... *
அத்தனேபத்தர்கட்கெளியனேமெத்தவத் தன்பர்தொழுகின்றமணியே ... *
ஆரணமொர்நான்கினுக்கரியபரிபூரண வாநந்தமோனகுருவே ... ... *
முத்தனேநத்துமிளிரத்தவிடையாயெழில்கொண் முக்கணுடைநக்கபிறைசேர் ... *
முடிமுதற்கடவுளேகடிமலர்க்கொன்றையாய் முற்றறிவுபெற்றசிவனே ... *
சித்தனேயத்துயரநீக்கியடிசேர்ந்திடச் சிட்டனேயடிமைகொள்வாய் ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுல்லைபுரிகின்ற தென்தில்லைநடராயனே. (எ௩)

தருவதற்கிதுசமயமருளைவிரைவாகவே சார்ந்திறைவநிறைவமேலாந் ... *
தற்பரத்தெய்வமேசிற்பரக்கடவுளே சச்சிதானந்தகுருவே ... ... *
வருந்திறற்கான்மலைபுரித்தவீரட்டபொன் மலைமருகவலையுநீரார்... ... *
வளர்முடிப்பவளமால்வரைபுரையுமேனியாய் மாதவத்தோர்கணெஞ்ச ... *
முருகவேகாட்சிதருமருமறையினந்தனே யொண்புலியினதளையார்த்த ... ...*
வொப்பினல்லரையனே மெய்ப்பொருட்சங்கரா வுத்தம க்ருபாமூர்த்தியே ... *
திருவதியுரத்தம்பையுடையனேவந்துனடி சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க் கொன்றுல்லைபுரிகின்றதென்தில்லைநடராயனே. (எ௪)

வம்புசெறிவெண்கமலமோடுசெங்கமலமுறை மாதரொழிஞுவிலும்மேன் ... *
மையமரும்மாகத்திலும்முறப்பெறுபவர்கள் வளர்முடியுமடியுமறியாச் ... ...*
செம்பொன்மலையம்மேனியெம்பெருமசங்கரா தேவர்கட்கரியபொருளே ... *
திவ்வியபரிபூரணாகாரதவமுள்ளோர்க டேறுதற்கெளியமணியே ... ...*

அம்புமுனைநிகர்வினையினால்வருபிராரத்துவ மகலவிளைவாகவருளி ... *
அங்கியெதிர்நின்றநவநீதமுருகுதல்போல வகநெகிழவின்பமூட்டச் ... ... *
சிம்புள்வடிவங்கொண்டவம்பகனுதற்கொன்றைசேர்சடையவடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க் கொன்றொல்லைபுரிகின்றதென்றில்லைநடராயனே. (எரு)

புரிந்திடுதியுன்றனருளன்றியுதவுவனென்று புகறியென்றன்மனமதிப் ... *
போதுமகிழ்வுற்றிடச்செய்துபராநாதனே பொருவினல்லாற்றலுடையாய் ... *
அரியமெய்ஞ்ஞானியர்க்குபதேசமீகின்ற வாநந்தமானகுருவே ... ... *
அத்துவிதநித்தனேமுத்தனேசித்தனே யத்தனேபித்தனேவன் ... ... *
திரிபுரமெரித்தகண்ணுதலுடைச்சேவகா நீவதியுமத்தசுத்த ... ... *
செந்தாமரைப்பெரியமாமலருள்ளாள்போற்று தேவிவளர்பாகமுடையாய் ... *
தெரிந்தவர்களகமேவுதேவர்துதிதேவனே செல்வனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (எசு)

அதிகமுறுபேரின்பவெள்ளமிகவூற்றெடுத் தன்பர்கட்காரவுதவு ... ... *
மத்திருமலர்ப்பாதநித்தநினைவேற்குநீயஃதருளியுலகமூன்றுந் ... ... *
துதிசெயெழின்மூவாயிரத்தவத்தந்தணர்க டொழுகின்றதலைமையுள்ள ... *
சுத்தநிர்க்குணதேவநத்துவங்கரனேத்து துரியநிறைதெய்வமணியே ... ... *
விதிமுனறியாதமுடியுடையவென்னையனே விண்ணவர்க்கரியபரனே ... *
வேதமொருநான்கினந்தத்துவளர்சோதியே வித்தகக்கருணைமூர்த்தி ... ... *
திதிகருவில்யான்மேவிவதிதலில்லாதவகை தேர்ந்தென்னையடிமைகொள்வாய்...*
சென்றெல்லைகண்டவர்க் கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (எஎ)

அண்டர்முனிவரர்களுங் கொண்டவெண்கட்பதுமமன்னமன்னன்னனுஞ்சீ ... *
அகலமுறுமிகலாழியம்படைக்கடவுளு மனுசொனுதற்றமூர்த்தி ... *
உண்டவன்னஞ்சமிளிர்கண்டனேபன்மணியொடொன்று பொற்கடகமேவும்... *
ஒண்கரமணக்காந்தளும்முகத்தண்மதியு முருசிமிகுதேனைநாடி ... ... *
வண்டுகண்முரன்றுதிரியுங்குழற்காடுமே வன்மையாப்பெற்றவுமையாள் ... *
வதியிடத்தப்பனேமுடியிடத தப்பனே வாழ்த்தினோர்க்கினியவமுதே ... *
திண்டிறற்சூலனேகாலபாசத்தில்யான் சேராமலடிமைகொள்வாய் ... ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (எஅ)

கருத்தினாலெவருமறிவொண்ணாத நீமனங்கடிதினிலிரங்கியேயக் ... ... *
கழலிணைகள்பெற்றிடக்கன்மவினையோடிடக் கருணைசெய்கருங்கொண்டலே ... *
உருத்திரத்தெய்வமேதேவர்கட்கதிபனே யுமையிடத்துற்றபரனே ... ... *
ஒருதருமவடிவாகியருளொடுபொலிந்துநல்லொண்மைசெறிவெண்மைவண்மை *
எருத்துகைத்திடுபாகனேகயிலைமேயனே யெப்பொருள்களுக்குமுதலாம் ... *
ஏகபரிபூரணசச்சிதாநந்தனே யெழின்மத்தம்வைத்தமுடியாய்... ... ...*
திருத்தகுமாரத்தனயனுக்கரியசெல்வனே செம்மையாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (எகூ)

என்மனதிலுன்பாதமன்போடுமெண்ணினே னிருகைகுவித்துநாளும் ... ...*
ஏத்தினேனருள்புரிந்திப்போதின்முன்யா னெடுத்தபல்பிறவிதம்முட் ... *
பன்னுதற்கரியாயியற்றுமிருவினைகளைப் பார்த்துநீருக்கிமேலும் ... ... *
பகர்பிராரத்வத்தைவினாவிலூட்டிப்பெருவில் பாணியொன்றதனில்வெய்ய ...*
வன்னியேந்தும்பெரியபொன்னம்பலத்தனே வானவர்க்கரியசிந்தா ... *
மணியேநலாகமத்திருவுருத்தனியனே வண்மையாநந்தமயனே ... ... *
சென்னியநபாயற்குமன்னுகதிதந்தபொற் றேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (அ௰)

சுந்தரர்தமக்கினியகடுநடைப்புரவியுஞ் சுரிகையுந்தந்துநறிய ... ... *
சுரிகுழலுணீலாயதாட்சியென்னுமையோடு சுகமாகவெந்தநாளும் ... *
அந்தரத்துறையமரர்வந்துதொழுமெழினுகை யார்ந்தகாரோணத்தினில் ... *
அமர்ந்தகாயாரோகணப்பெயர்ச்செல்வனே யாதியேமாதேவனே ... *
இந்துமுடியாய்மதுன்னாதன்னிலறுபத்துனுன் கெழிலாடல்செய்தபரனே ... *
இன்னுமளவில்லாததலமதனி லற்புதமியற்றுமாணிக்கமேதண் ... ... *
சிந்துபுனையண்ணலேயென்றன்மலவேனாநீ சேதித்துனடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (அக)

ஆக்கலொடுகாத்தலுமழித்தலுந்திகழ்மூன் றருந்தொழில்களாற்றுகின்ற ... *
வம்புயச்செம்மலர்க ளொத்தநின்பதவிணையை யன்புடன்வைகமுறு ... *
நோக்கித்துதித்தெண்ணினேன்காரியப்பகுதி நோக்கவேயில்லைநீயே ... ... *
நோவாமலுள்ளமினியையனேயவ்வினிதனி னேன்புமெய்த்தவமும்பெறப் ... *
பார்க்குமுக்கண்ணனேபோர்க்கஞ்சலில்லாத பண்புவிடைதன்னிலேறிப் ... ...*
பார்வதியுமாதேவியோடுவந்திளநிலவு பணியணியும்வேணியரனே ... *
தீக்கரத்தொருவனேபோக்குவரவில்லாத தெய்வமேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (அஉ)

ஒன்றுகேளென்மனக்கொள்கையான்மொழிகுவே னும்பர்கட்கருமையாகி ... *
யுணர்பவர்க்கெளிமையாய்நின்றபரநாதனே யோதுமஃதென்னையென்னி ... *
னின்றமெய்யன்பிலார்வந்துதிப்பதுதிண்ண நேயமெவ்வளவுமில்லா ... *
நிகரில்கடையேற்குமேலளவில்சன்மக்குவைக ணேரிடுதலுண்மைபொய்த்தல்...*
அன்றுலவன்புதனையின்றுபெறவருளிமே லடைபிறவிநீக்கியெழிலார் ... *
அம்புயச்சேவடியிலொன்றநீசெய்தலே யறையுநன்னீதமலவோ ... ... *
சின்மயக்கடவுளேபொன்மயச்சடையனே தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றுமெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (அங)

கனவினைத்தான்கண்டுபின்னேவிழிக்கிலக் கனவினிற்கண்டபொருளைக் ... ...*
காணாததன்மையைப்போலுமில்வாழ்க்கையே காசில்சநகாதிநால்வர் ... ...*
வினாவினுக்குத்தரந்தருளுமண்ணலே வேதவேதாந்தமெல்லாம் ... ... ...*
விளம்பிடற்கமையாதபுகழ்நீலகண்டனே வேண்டுவார்வேண்டுபொருளில் ... *

எனுதுதவுவள்ளலேயேகபரிபூரண விமயமலைவந்தவுமையாள் ... .. *
இடமன்னுகடவுளேயடல்விடையுகைத்தவென் னிறைவனேயிதழிவண்டு .. *
தெனுதெனவெனப்பாடவணியுமெண்டோளனே செம்மையாவடிமைகொள்வாய்
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தெனறில்லைநடராயனே. (அச)

எத்தனைவிதத்தில்யானென்பெருந்துயரம தியம்பவுங்கேட்கவில்லையே ... *
எங்குநிறைபூரணப்பொருளென்றுயாவரு மெடுத்துரைத்திட்டபரனே ... *
யத்தனேகனகசபைநித்தனேயண்ணலே யாநந்தமோனகுருவே ... ... *
யயனரிதமக்குமேலாநின்றநேயனே யாதிநடுவந்தமில்லாச் ... ... *
சுத்தனேசூலவெம்படையனேவிடையனே துரியத்தினீங்குபொருளே ... *
துய்யனேமெய்யனேசெய்யனேயையனே தொழுபவர்க்கருளுமணியே ... *
சித்தனேயினியாயினுங்குறைதெரிந்துனது திருவடிக்க்டிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (அரு)

ஆறெனுதாரத்தினுற்றபெருநாதாவ நாதிநீறேருநெல்ல ... ... ... *
வக்கமணியணிதேகனேபரஞ்சோதியே யானிமார்கழிமதியினிற் ... ... *
சாறுபெறுகட்டழகனேதனித்தெய்வமே தக்கன்முடியைச்சிதைக்குந் ... *
தடம்புயந்திகழ்வீரபத்திரக்கடவுளே சாற்றுயிருமுடலும்வேறுக் ... [ள்கைக்
கூறுசெய்தொழிலினிற்கூற்றுவனெனப்பெயர்கொள்கொடியற்செகுத்தகொ
குருஉமணிச்செழுமலர்த்திருவடிச்செல்வனே கோதிலார்தங்கட்கெலாந் ... *
தேறுதற்கெளியாய்தினந்துதித்திடுமெனது தீமைதீர்த்தடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (அசு)

கிஞ்சுகநிறத்தநீள்சடையுடைப்பரனே கிளக்குமாகாமியத்தைக் ... ... *
கெடுத்துமற்றச்சஞ்சிதத்தையறமாற்றியே கெடுபிராரத்துவத்தைப் ... *
பஞ்சவிந்திரியங்களும்மநுபவித்திடப்பரமனே விரைவிலாற்றிப் ... ... *
பலர்செய்புகழ்ச்சியொடிகழ்ச்சியும்பயனெனப் பற்றுமனிற்கவருளி ... *
நெஞ்சகமுறுக்கியாநந்தம்பெருக்கிநீ நின்கழற்கமலமலரி ... ... ... *
னேயமாயானுறச்சுத்தபரிபூரண நின்மலாவன்மைவெம்மைச் ... ... *
செஞ்சிகையழற்பாணிநாதனேபோதனே தேவனேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே .(அஎ)

தண்டுலமுளைப்பதில்லத்தன்மைபோலவுன் றன்னருட்டீயினாலே ... ... *
தகைமைபெறவெந்தநல்லுயிர்மீட்டும்வந்திடா தண்ணிதழ்க்கமலமேய ... ...*
எண்டொகைக்கண்ணுளோன்கண்ணன்முதலாயினோ ரோத்துதற்கரியபொருளே *
இமயமலையுமையம்மையமையிடத்தப்பனே யெழில்கொளுன்பாதவிணையைக் ...*
கண்டுளத்தெண்ணினேனங்ஙனமியற்றியே கருணைசெய்தென்றுமினிமேற் ... *
கடற்புவியிடத்துயான்வந்திடாவகைநற் கடுக்கைவிரிமலைமதுவின் ... *
தெண்டுளிதுளித்திடமுடித்தபொற்சென்னியஞ் செல்வனேயடிமைகொள்வாய் *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே, (அஅ)

பத்தனாவுன்றனக்கொழிவிலாதென்றுமே பாடினேன்கூவுகின்றேன் ... *
பரவுமிவ்வொலியங்குவந்துசெஞ்செவிகளிற் படவில்லையோவையனே ... *
அத்தனேயவண்வதியுமடியர்யாராயினு முறையவேயில்லையோசீர் ... ...*
அபிராமிசிவகாமியம்மையம்பிகைதேவி யுமைதராக்கூறவில்லையோ ... ... *
முத்தனேநித்தனேபித்தனேசுத்தனே முடிவிலாநந்தமயனே ... ... *
முனிவர்தொழுமண்ணலேவிண்ணவர்க்கரியனே முன்னவர்தமக்குமுன்னே ... *
சித்தனேமாணிக்கவண்ணனேகருவினிற்சேராம லடிமைகொள்வாய் .. ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௮௯)

என்மனைவிமக்கண்முன்னாயினோர்யாவர்களு மில்லிடைக்காத்துநின்றும் ... *
யானிறக்கும்போதிலவர்களிற்சிலரில் லிருந்துமிக்கழுதுநிற்க... ... *
இன்னுமித்தியுடல்சுமந்துநன்காட்டகத் தேகுமப்போதுமம்மட் ... ... *
டிரங்கியேசிலர்செல்வரல்லாலிவ்வுயிரினோ டியையப்பொருந்துவாரோ... ...*
சன்மமுறமுன்னின்றவிருவினைகள்வந்திடுந் தப்பாமலுண்மையிதுவே ... *
சர்வபரிபூரணாபின்னுமவைபிறவிக்கு வித்தெனுந்தன்மையாமாற் ... *
சென்னிமதியாயவற்றைத்துரந்துன்பதஞ் சேரவேயடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௯௦)

சித்தத்திலுன்கழற்பாதமலரெண்ணுவோர் தேவர்கட்கரியதாகிச் ... ...*
சிறந்துவளர்பேரின்பவெள்ளத்தையேயுண்டு தேக்கித்திளைத்துநிற்றல் ... *
சித்தமென்றேகாமிகாதிநின்னாகமந் தேர்ந்தவர்கள்செப்பலாலே ... ...*
திவ்வியபரிபூரணாகாரசிவசங்கரா திகழுநற்கல்வியேவா ... ... ... *
சித்தபெருமாந்தராவோர்தொழக்கருணைசெய் தேவனேமதுரைதன்னில் ... *
தென்னர்பெருமானாகியாண்டெவருமோர்ந்திடத் திருவருட்கொள்ளையாலே ...*
சித்தனாய்விளையாடுசெல்வனேயங்ஙனஞ் செய்தென்னையடிமைகொள்வாய்... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௯௧)

சிவபாடவடியவர்க்கருள்கின்றபரமனே தீர்த்தமார்மூர்த்தமுடையாய் .... *
சிற்றறிவுள்ளோராயினுங்கண்டுபோற்றியெந் தீயமலமூன்றுமின்னே ... ... *
சிவபாடடைந்தமுக்கண்ணனேகண்ணனே செப்புமுன்னாயதேவர் ... *
தேடுதற்கரியவானவவெனச்செய்பெரும தேவியாநந்தநீர்க ... ... ... *
சிவபாடவக்கண்கணாக்கவாடிடுமிறைவ செஞ்சடைப்பிஞ்சுமதியாய் ... *
செங்கண்விடயாய்முனர்த்தரிசநஞ்செய்தவர்க டிகழ்நன்மனத்தையேவ ... *
சிவபாடராக்கஞ்சுகத்தனேகருவினிற் சேராமலடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௯௨)

தீவருமெழிற்கரத்தத்தனேசித்தனே தேடவரிதாயபொருளே ... ... ...*
செங்கண்மால்விடைமேவுமண்ணலேவெண்ணிலாச் சென்னிபுனையையவெந்தத் *
தீவருமகிழ்ந்துபோற்றிடவருளும்வள்ளலே தெய்வமறைநான்குமின்னுஞ் ... *
செப்பவவைமேனின்றமுப்புரமெரித்தவென் றேவனேயடியர்துன்பந் ... *

தீவருந்துதலிலாவண்ணமருள்செல்வனே திகழ்கொன்றைதுன்றுதாழஞ் ... *
சேர்த்தசூலத்தனேகரகபாலத்தனே தேர்ந்தவர்களெண்ணுமந்தத் ... *
தீவருதலைப்பெரியவிரதமாக்கொள்ளுவோய் தீயேனையடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுகின்ற தென்றில்லைநடராயனே...(௧௩)

திருக்குருகியெண்ணியேதுதிசெய்துதாழ்ந்திடுந் திகழுமடியார்க்குநீக்குஞ் ... *
செய்யவேணிப்பெருங்கடவுளேபரமனே திங்கணுதலோடுகுவளைத் ... *
திருக்குருமென்முலைபெற்றவுமையிடத்தேவைத்த திரிநயனமுற்றவொருவ ... *
திவ்வியபரிபூரணாகாரசிவசங்கரா செறியிருட்டொகுதியழிக ... ... *
திருக்குருமுனோர்தரவறைந்துபற்கொட்டியே திறல்வீரபத்திரப்பேர் ... ... *
சேரவொளிர்நாதனேயார்மருவுநீதனே தேவனேயென்றனுடைய... ... *
திருக்குருவுமானவேதாந்தனேசெல்வனே சேவகாவடிமைகொள்வாய்... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுகின்ற தென்றில்லைநடராயனே ... (௧௪)

சிவஞ்சத்தியாகியேயுலகமுழுதுந்தந்து திதிசெய்துபோக்குமொருவ ... *
சித்தசன்பூங்கணைதொடுக்கவன்னவனையே தீய்த்தநினைநெஞ்சிலேவ ... ...*
சிவஞ்சத்தியானமேசெய்மனத்துற்றிடாச் செல்வனேயெல்லையில்லாச் ... *
சீர்மறையொர்நான்கினுக்கப்பாலநீருடன் சேர்கிரநீக்கியுண்ணொ ... ...*
சிவஞ்சத்தின்மேலேறுமஞ்சமுதலாயினோர் தேடரியசைவமணியே ... *
திகழுமுக்கண்ணனேசெஞ்சடைக்கடவுளே செறிபிறவியாய்ந்துகட்க... ...*
சிவஞ்சத்தியாநின்றகடலாயினேனஃது தீர்க்கவேயடிமைகொள்வாய் .. *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௧௫)

திருவடிவுண்மார்பகத்துலவவெண்பாலினிறை சீர்க்கடலிடத்தநந்தன் ... *
திவ்வியசயனத்திலறிதுயிலமர்ந்தோனறிதல் செய்யாதகந்திருவன்கந் ... *
திருவடிகழ்யாழின்மிகுசுவையுள்ளமொழியம்மை சேரிடத்தையமெய்ய ... *
சிற்பரபெரும்பூதபொற்கலைக்கரநாத தேவனேவறுமையால ... ... ...*
திருவடிரியாநின்றவெந்தமக்காக்கநீ சேர்க்கவென்றேத்துமடியார் ... ... *
சேரவருள்வள்ளலேசெங்கனல்விழிச்சோதி செம்மலேயுன்றனிணையார்... ...*
திருவடியிடத்தியானொன்றுமலொன்றவே திண்ணமாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௧௬)

சேயிருங்கிரணமாயிரஞ்செறிந்துற்றிடுந் தீப்பருதிநடுவில்வைகித் ... *
திரைக்கடனிலத்துமறையோர்தருமமேந்துமென் றேவனேயாறுமுகனுஞ் ... *
சேயிருக்காதிமறைமுன்னின்றபிரணவச் செம்பொருளையீயவேநற் ... *
செவிகொடுத்திடுபெருமசெழுமலர்க்கொன்றையஞ் செல்வனேதண்மையுள்ள...*
சேயிருட்டேய்த்தவெண்பிறைமருவுகற்றையாய்த் திகழ்சடையவிடையமேலாந்.*
தேவர்கட்கதிபனேசிற்சபைக்கடவுளே தேர்ந்திடார்கட்குமிக்க ... ... *
சேயிருந்துள்ளவடியார்க்கணுகுமப்பனே தீயேனையடிமைகொள்வாய்... ...*
சென்றெல்லைகண்டவர்க்கொன்றொல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே...(௧௭)

சிகழிகையிடத்திலணியாகின்றயாவையுஞ் சேரமுடியாக்கமுதலாச் ... *
செப்புநல்லார்போற்றுசெப்புநிகர்மாமுலைத் தேவியுறைவாமகொன்றைச் ... *
சிகழிகையணிந்தபொற்சடையுடைக்கடவுளே தேவர்கட்கரியபரனே ... *
திரிபுராந்தகநக்கநந்திநீறணிபகவ திகழுமுக்கண்ணனேச ... ... ... *
சிகழிகையுண்மனமாந்தர்தம்மிடத்தடையாத செங்கண்மால்விடையின்மேவுஞ் *
சிற்பரத்தனிநாதகற்பகவுவாத்தந்தை தியாடியென்னுளேவ ... ... *
சிகழிகைம்மலமூன்றுடினியடியனேன்கருச் சேராமலடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௯௮)

சேவடிவுள்வாகனத்தேறுமொருசெல்வனே திணையப்புவன்னியனிலந் ... *
திகழம்பரம்பருதிதிங்களுயிராயினோய் சித்திரைத்திங்களோடு ... ... *
சேவடிபுகழ்த்திங்களிவ்விரண்டுங்கொண்டு செறிவேனிலாளிமுன்னந் ... ... *
தேமலர்ப்பகழிவிடமாய்த்திடுதயாபரச் செம்மலேமதகுஞ்சரச் ... ... *
சேவடித்துக்கீண்டுசெருமமணிவீரட்ட சீதரக்கடவுளாதி ... ... *
தேவர்கட்கரியனேபாவலர்க்கெளியனே தெய்வமறையாவுமறியாச் ... *
சேவடித்துணைதந்துயான்கருவின்மேவாது செம்மையாவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே (௯௯)

சிக்குஞ்சிதட்டறிவுள்ளோர்க்கப்படாதவென் சித்தனேபத்தர்போற்றுந் ... *
தேவர்கள்சிகாமணிக்கடவுளெக்காலமுஞ் சிந்தித்தமனசிலேவ ... *
சிக்குஞ்சிதத்திங்கண்முடிமன்னுமன்னனே திருஞானசம்பந்தர்முன் ... *
செப்புதேவாரத்திலன்புசெறியின்பனே திருநாவுக்கரையர்தமிழ்வா ... ...*
சிக்குஞ்சிதர்க்கரியமுத்திதரும்வள்ளலே திருநாவலூரரோடு ... ... *
திருவாதவூரர்சொலருட்பாவினுருவான தெய்வமேசைவவுன்சு ... ... *
சிக்குஞ்சிதத்தாளிலொன்றிக்கலப்புறச் சிவபெருமவடிமைகொள்வாய் ... *
சென்றெல்லைகண்டவர்க்கொன்றெல்லைபுரிகின்ற தென்றில்லைநடராயனே. (௱)

---

வித்துவத்திறமைசேர்செந்தமிழ்ப்புலவர்முன் வேண்டுபிரபந்தம்யாவும் ... *
விளங்கிடச்செய்துனதுநற்கருணைபெற்றோர் விளம்புமத்தன்மையுள்ள ... *
தத்துவமில்லாதவையாத்துரைப்பெயரினேன் சதகமென்றுரைசெயிந்தத் ... *
தமிழினுறுநூலினைப்பத்தியிற்செய்தனன் றண்ணருள்செய்தாளவேண்டும் ... *
பத்துமுடிமெய்வல்லரக்கனைக்காலிற் பதிந்தபெருவிரலினாலே ... *
பல்லோரறிந்திடமிதித்தவென்பரமனே பன்மணிப்பூணினோடே ... *
யத்தசிரமாலையுயர்பாம்பெலும்பாதியை யணிந்துபொற்பொதுவிலாடு ... ... *
மண்ணலேபண்ணவர்க்காதியேயையனே யருமையாநந்தவடிவே ... ... *

தில்லைநடராயசதகம்-முற்றிற்று.

பொன்னம்பலந்தனிலே பொற்பாதமொன்றையெடுத்
தன்னிகர்நடையாளம்பிகையும் - பின்னு
மனைவோருங்காணநடியண்ணலடியற்குன்
றனியெழிற்சாயுச்சியமேதா (௧)

சாயுச்சியந்தான்றருமுனருளுள்ளோர்க்கு
நீயுச்சியார்கொன்றைநின்மலனே - யேயவே
தந்திடுவாயெற்குமதுசாரவருளச்சிவனே
வந்திடுவாய்சிந்தைமகிழ்வாய். (௨)

வானேபரலோகாவண்மைச்சிதம்பரத்தெம்
மானேயுனதுமலர்ப்பதத்தைத் - தானே
நினைத்துத்துதித்தன்பாய்நின்றுகரங்கூப்பென்
மனத்துவதியச்சிவனேவா. (௩)

வந்தெனதுவல்வினையைமாற்றியருளானந்தந்
தந்தருளலாகாதோதாண்டவா - விந்து
வதிசடையனேநீவழங்கிங்கிதுவே
ததிமுத்தியைப்புரியத்தான். (௪)

தானேமுளைத்ததனிமுதலேசங்கரனே
வானேமுதலானவண்பூதா - யானே
யுனதுபேரானந்தவொண்குஞ்சிதத்தா
ளினைப்பெற்றுவாழவருளே. (௫)

---

இவையும்மேற்படியாராலேயேசெய்யப்பட்டன.